Not for sale

செப்டம்பர் - அக்டோபர் 2013

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## எண்ணாகமத்தின் புத்தகம்

துவக்க அதிகாரங்கள் • புழுதி, ஜலம் மற்றும் மயிர் • நசரேய விரதம்

மூன்று பாடங்கள் • இரண்டு வெள்ளி பூரிகைகள்

எண்ணாகமத்தின் புத்தகம்

# ஆதியிலே



மோசே இஸ்ரயேலர்களுக்குக் கொடுத்த "நியாயப்பிரமாணம்" அல்லது தோரா என்று அழைக்கப்படும் வரிசைகளில், எண்ணாகமம் நான்காம் புத்தகமாகும். இஸ்ரயேலர்கள் வனாந்தரத்தில் இருந்த தங்களுடைய ஆதி நாட்களில் கணக்கெடுத்ததினிமித்தம் இப்புத்தகத்திற்கு அப்பெயர் சூட்டப்பட்டது. ஆயினும், அந்த புத்தகத்தின் பெரும்பாலான பகுதி வனாந்தரத்தில் இஸ்ரயேலர்கள் பெற்ற அனுபவங்களைக் குறிப்பிடுகிறது.

நன்கு அறியப்பட்ட பல சம்பவங்கள் எண்ணாகமம் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது - பாம்பு கடியிலிருந்து இஸ்ரயேலர்களை குணப்படுத்துவதற்காக மோசேயினால் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பம், மோசே கன்மலையை அடித்து இரண்டாம் முறை தண்ணீர் புறப்படச் செய்தது (முதல் முறை யாத்திராகமத்தில் காணலாம்). லேவியர்களில் ஒவ்வொரு வகுப்பாருக்கும் பொறுப்புகள் நியமிக்கப்படுதல், நசரேய விரதம், கோராகு செய்த கலகம், ஆரோனின் கோல் துளிர்த்த காரியம் மற்றும் பீலேயாமிடம் பேசின கழுதை... போன்ற காரியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி" (1 கொரி. 10:11), எண்ணாகமம் புத்தகத்தில் தேவனுடைய ஆவியினால் பதிவு செய்யப்பட்டிருக்கும் சில பாடங்களைக் கண்ணோக்குவதே இந்த பிரதியின் நோக்கமாகும். இதில் காணப்படும் சில பாடங்களிலிருந்து தனிப்பட்ட எச்சரிப்புகளைப் பெறுகிறோம். இஸ்ரயேலர்கள் வனாந்தரத்தில் பயணித்ததற்கு ஒப்பாக, சபை பரலோக கானானுக்குப் பயணித்த சுவிசேஷ யுகத்தின் பல்வேறு பகுதிகளை, அடையாளப்படுத்துவதிலிருந்தும் பாடங்களைக் கற்றுக்கொள்கிறோம்.

"துவக்க அதிகாரங்கள்" என்ற தலைப்பு, சுவிசேஷயுகம் மற்றும் அதை தொடர்ந்து துவங்கக்கூடிய இராஜ்யத்தை, முதல் ஒன்பது அதிகாரங்களின் வழியாகக் கண்ணோக்குகிறது.

"புழுதி, ஜலம் மற்றும் மயிர்" என்ற தலைப்பு, எண்ணாகமம் ஐந்தாம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள ஒரு விசித்திரமான சம்பவத்தைக் கண்ணோக்குகிறது - நம்முடைய பரலோக மணவாளனாம் இயேசுவுக்கு நியமிக்கப்பட்ட மணவாட்டிக்கு முன் வைக்கப்படும் சோதனையின் அடையாளமாக பழங்காலத்தில் ஒரு மனைவி தன்னுடைய கணவனிடம் செய்து கொண்ட திருமண ஒப்பந்தத்தின் சோதனை இங்கு கண்ணோக்கப்படுகிறது.

"நசரேய பொருத்தனை" என்ற தலைப்பு, தேவனோடு உடன்படிக்கை செய்த நம்முடைய பொருத்தனைக்கு நிழலான பல குறிப்பான பொருத்தனைகளைக் கண்ணோக்குகிறது. மேலும், நம்முடைய பரலோக தந்தையிடம் பக்திக்குரிய வாழ்க்கையை வாழ்வதற்குத், தேவையான பல பாடங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

"மூன்று பாடங்கள்" என்ற தலைப்பு, பழங்காலத்து வசனங்களிலிருந்து ஒருவர் எடுத்துக் கொண்ட சாரத்தின் அர்த்தங்களில் பல்வேறு நிலைகளை மறைமுகமாகவும், சுருக்கமாகவும் கண்ணோக்குகிறது. இந்த கட்டுரை சுருக்கமான மூன்று பாடங்களைமட்டுமல்ல, கிறிஸ்தவ வாழ்கையில் அனுபவிக்கப்படும் பாடுகள், அன்பு, இரக்கம் மற்றும் தேவன் மேல் கொண்டுள்ள நம்பிக்கையைக் கொடுக்கும் குறிப்பான பாடங்களையும் கொண்டுள்ளது.

இறுதியாக, "இரண்டு வெள்ளி பூரிகைகள்" என்ற தலைப்பு எண்ணாகமம் 10 முதல் 20 அதிகாரங்கள் வரையிலுள்ள, ஆழமான விவரங்களை கண்ணோக்குகிறது. இந்த அதிகாரங்கள் சுவிசேஷ யுகத்தின் ஏழு காலங்களைத் தொடர்ந்து வரும் கிறிஸ்துவின் ஆயிரம் வருஷம் ஆட்சியின் துவக்கத்தையும் விவரிக்கிறது.

எண்ணாகமம் புஸ்தகத்திலுள்ள விலையேறப் பெற்ற பாடங்களை கவனமாக மதிப்பிடக்கூடியவர்களுக்கு இந்த பிரதி நிச்சயமாக ஊக்கம் அளிக்கக்கூடியதாகவும், ஆவிக்குரிய நிலையை உயர்த்தக்கூடியதாகவும் இருக்கும் என்றும் நாம் நம்புகிறோம். புது சிருஷ்டிகளுக்கான விலையேறப்பெற்ற போக்கிஷங்கள் இப்புத்தகத்தைப் பொருத்தவரையில் குறைவாகவே ஆராயப்பட்டுள்ளது.

செப்-அக் 2013


| | |
|---|---|
| **துவக்க அதிகாரங்கள்** | 2 |
| சுவிசேஷ யுகத்தின் மேலோட்டமான கண்ணோக்கம் | |
| **புழுதி, ஜலம் மற்றும் மயிர்** | 7 |
| விசுவாசத்தின் ஒரு பரீட்சை | |
| **நசரேய விரதம்** | 14 |
| நம்முடைய அர்ப்பணிப்பைக்குறித்த பாடங்கள் | |
| **மூன்று பாடங்கள்** | 22 |
| நான்கு நிலையின் பொருள் | |
| **இரண்டு வெள்ளி பூரிகைகள்** | 25 |
| சபயின் ஏழு நிலைகள் | |
| **தீர்க்கதரிசனத்தில் இன்று** | 32 |



துவக்க அதிகாரங்கள்

# சுவிசேஷ யுகத்தின் மேலோட்டமான கண்ணோக்கம்

"இஸ்ரவேலர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் முதல் தேதியில், கர்த்தர் சீனாய் வனாந்தரத்திலிருக்கிற ஆசரிப்புக் கூடாரத்திலே மோசேயை நோக்கி" (எண். 1:1).

யாத்திராகமத்தில் தொடர்ந்து வந்த முதல் வருடத்தில், ஆசரிப்புக்கூடாரத்தை இஸ்ரயேலர்கள் கட்டின காலத்தின்போது, எடுக்கப்பட்ட குடிமதிப்பின் கணக்கீட்டை இப்புத்தகத்தின் முதல் அதிகாரங்கள் விவரிப்பதினிமித்தம் இந்த புத்தகம் "எண்ணாகமம்" என்று அழைக்கப்படுகிறது. ஆயினும், மேற்கூறப்பட்ட வசனத்தின் அடிப்படையில் இந்த புத்தகத்தை, "வனாந்தரத்தில்" என்ற தலைப்பில் எபிரெயர்கள் அறிந்திருந்தார்கள்.

எகிப்திலிருந்து இஸ்ரயேலர்கள் பயணத்தைத் துவங்கிய இரண்டாம் வருடம், முதல் மாதத்தின், முதலாம் தேதியில் ஆசரிப்புக்கூடாரம் நிர்மாணிக்கப்பட்டது (யாத். 40:2, 17). ஆசரிப்புக் கூடாரம் ஸ்தாபிக்கப்பட்டபின், முதல் வேலையாக அதில் பணி செய்யும் ஆசாரியர்கள் பிரதிஷ்டை பண்ணப்பட்டார்கள். இந்த செயல்பாட்டிற்கு, முதல் மாதத்தின் முதல் ஏழு நாட்கள் தேவைப்பட்டது (லேவி. 8:33). அதற்குப் பின், தேவனுக்கு முன் இஸ்ரயேலர்கள் பரிசுத்தமாக நிற்பதற்கு பலிகள் செலுத்தப்பட வேண்டியதாயிருந்தது (லேவியராகமம் ஒன்பதாம் அதிகாரம்). லேவியராகமத்தின் மீதியுள்ள பகுதி, ஆசாரியர்களின் பொறுப்புகளைக்குறித்து விவரிக்கிறது. அதற்கு பின் எண்ணாகமம் புத்தகத்தில் உண்மையான சம்பவங்கள் துவங்குவதைக் காணலாம். அதில் இரண்டாம் மாதம் முதல் தேதி அன்று இஸ்ரயேலர்களை கணக்கெடுக்க வேண்டும் என்று தேவன் மோசேயிடம் கட்டளையிட்டதைக் காணலாம். (ஒரு புதிய வருடத்தின் முதல் நாளில் ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபிக்கப்பட்ட நேரம் சுவிசேஷ யுகத்தைப் பொருத்தவரையில், ஒரு புதிய யுகத்தின் துவக்கத்தை அடையாளப்படுத்தும். பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடாகிய இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும் தேவனுடைய வார்த்தைகளின் வழியாக பரிசுத்த ஆவியை நாம் பெறுவதினால் வசனங்களில் இரண்டு என்ற எண் பொதுவாக பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்தும். இந்த இரண்டு பகுதிகள் பொதுவாக சகரியா புத்தகத்தில் நான்காம் அதிகாரத்தில் வரும் இரண்டு ஒலிவ மரங்களினால் அடையாளப்படுத்தப்படுகிறது),

எண்ணாகமத்தின் முதல் அதிகாரம் கணக்கெடுப்பின் விவரங்களைக் கொடுக்கிறது. இரண்டாம் அதிகாரத்தில், இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்கள் தங்கள் வரிசையின் படி எந்தெந்த திசையில் பாளையம் இறங்க வேண்டும் என்ற கட்டளைகள் தேவனால் மோசேக்குக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றி பாளையம் இறங்கினாலும், அதிலிருந்து "வெகு தொலைவில்" அவர்களுடைய கூடாரம் போடப்பட்டது (எண். 2:2). நான்கு திசைகளாகிய கிழக்கு, தெற்கு, மேற்கு மற்றும் வடக்கில் மும்மூன்று கோத்திரங்களாகப் பாளையம் இறங்கினார்கள். ஆசரிப்புக்கூடாரத்தை மற்ற கோத்திரங்களிடமிருந்து பரிசுத்தமாகப் பாதுகாப்பதற்கு ஆசரிப்புக் கூடாரத்திற்கும், அவர்கள் தங்கின ஸ்தலத்திற்கும் இடையில் நீண்ட இடைவெளி காணப்பட்டது.

இஸ்ரயேலர்களில் 20 வயதிற்கு மேற்பட்ட ஆண்களின் தொகை 603,550 என்று (எண். 2:32-ல்) குறிப்பிடுகிறது. (யாத். 38:25-28-ல்), இக்காரியம் காணப்படுவதினால், இந்த எண் நம்பத்தகுந்ததாயிருக்கிறது. ஏனெனில், இஸ்ரயேலர்கள் தங்களுடைய ஜீவனை மீட்பதற்காக, அரை சேக்கல் வெள்ளியைக் கொடுத்தார்கள். இதை நாம் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது எண்ணாகமத்தில் கூறப்பட்ட நபர்களின் எண்ணிக்கை பொருத்தமாயுள்ளது.

எண்ணாகமம் மூன்றாம் அதிகாரத்தில், பொதுவான கணக்கீட்டில் எண்ணப்படாத லேவி கோத்திரத்தின் புருஷர்களின் எண்ணிக்கையைக் காணலாம். (இஸ்ரயேலின் பண்ணிரண்டு கோத்திரங்கள் பொதுவாக கணக்கெடுக்கப்படும்பொழுது, யோசேப்பின் இரண்டு குமாரர்களாகிய எப்பிராயும், மனாசேயும் சேர்க்கப்படுவார்கள். ஏனெனில், லேவியர்களைத் தவிர மொத்த இஸ்ரயேலின் கோத்திரங்கள் பண்ணிரண்டாக இருக்கும்). கெர்சோன், கோகாத் மற்றும் மெராரி என்ற மூன்று குமாரர்கள் லேவிக்கு இருந்தபடியினால் லேவியர்களின் எண்ணிக்கை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது (எண். 3:17).

பதிலாக லேவியர்கள் எடுத்துக் கொள்ளப்பட்ட தினால், இவர்கள் சுவிசேஷ யுகத்தின் உடன்படிக்கை செய்தவர்களை அடையாளப்படுத்துகிறார்கள்). அதற்குப் பின் எட்டாம் அதிகாரத்தில், ஆசாரியர்களிலிருந்து பிரிக்கப்படும் லேவியர்களை திரள்கூட்டத்தார் அடையாளப்படுத்துகிறார்கள்.

இப்படியிருக்க, மீதமுள்ள இஸ்ரயேலர்கள் யாரை அடையாளப்படுத்துவார்கள்? பஸ்கா இரவின் போது, எல்லா இஸ்ரயேலர்களும் தங்களுடைய வீட்டின் மேற்சட்டத்திலும், நிலைக்கால்களின் பக்கங்களிலும் பஸ்கா ஆட்டின் இரத்தம் தெளிக்கப்பட்டு, அனைவரும், அவரவர் தங்கள் தங்கள் வீட்டிற்குள் பஸ்கா ஆட்டை புசித்தார்கள். பஸ்கா ஆட்டிற்கு மதிப்பு கொடாத எகிப்தியர் களிடமிருந்து இந்த இஸ்ரயேலர்கள் வேறுபட்டவர் களாய் இருந்தார்கள். ஆகவே, அந்த எகிப்தியர்கள் பொதுவாக இயேசுவின் மேல் விசுவாசம் இல்லாத பல அபாயகரமான துன்பங்களுக்கு அகப்படக்கூடிய உலக ஜனங்களை அடையாளப்படுத்துகிறார்கள். (எகிப்தியர்களின் முதற்பேரானவர்கள் பஸ்கா வாதையில் அழிக்கப்பட்டார்கள் என்ற உண்மை ஒருவேளை, பழைய ஒழுங்கின்படி உள்ள உலகத்தை அடையாளப்படுத்தக்கூடும்.) இதற்கு எதிரிடையாக இஸ்ரயேலர்கள் மொத்த கிறிஸ்தவ உலகத்தையும் அடையாளப்படுத்தும். இவர்கள் இயேசுவின் மேல் விசுவாசமுள்ளவர்களாய், இயேசுவின் இரத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதை விலையேறப் பெற்றதாக எண்ணி அந்த ஆட்டை புசிக்கிறார்கள்.

இப்படியாக, சுவிசேஷ யுகத்தில் தங்கள் பயணத்தைத் துவங்கும் கிறிஸ்தவ மண்டலத்தின் ஒரு சித்திரத்தை எண்ணாகமம் முதல் நான்கு அதிகாரங்களில் காணலாம். விசுவாசமுள்ள அனைவரும் இஸ்ரயேலர்களையும், லேவியர்கள் அனைவரும் ஆவிக்குரிய பணிக்கு உடன்படிக்கை செய்தவர்களை அடையாளப்படுத்துகிறார்கள்.

### எண்ணாகமம் ஐந்து மற்றும் ஆறாம் அதிகாரங்கள்

ஒரு முழு கட்டுரை இந்த ஒவ்வொரு அதிகாரத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு ஸ்திரீ தன்னுடைய உத்தமத்தை நிரூபிக்கும் சோதனையை ஐந்தாம் அதிகாரத்தில் காணலாம். இக்காலத்து சுவிசேஷ யுகத்தில் பரிசுத்தவான்களுக்குரிய சோதனையை இது அடையாளப்படுத்துகிறது; பரலோக மணவாளனுக்கு நாம் விசுவாசமுள்ளவர்களாய் இருக்கிறோமா? (வெளி. 17:5). பூமிக்குரிய இராஜாக்களோடு தன்னை இணைத்துக் கொண்ட அவிசுவாசமுள்ள ஒரு ஸ்திரீயை, "வேசி" என்று உருவகமாக விவரிக்கப்படுகிறது. இதற்கு எதிரிடையாக, அப். பவுல், கொரிந்து சபைக்கு எழுதின நிருபத்தில் உடன்படிக்கை செய்த அனைவரையும் "கிறிஸ்துவுக்கு நியமிக்கப்பட்ட கற்புள்ள கன்னிகையாக" இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார் (2 கொரி. 11:2).

பரிசுத்த ஸ்தலத்தில் தரையில் இருக்கும் புழுதியை தண்ணீரில் கலந்து சோதிக்கப்படும் ஸ்திரீக்கு கொடுக்கப்படும் காரியம் எண்ணாகமம் ஐந்தாம் அதிகாரத்தில் விவரிக்கப்படுகிறது. இது நம் அனைவருக்கும் பொருந்தக்கூடியதாய் இருக்கிறது. இக்காலத்தில், நம்முடைய அனுபவங்களின் போது, இந்த உலகத்தின் அசுத்தங்கள் சத்தியமாகிய ஜலத்தோடு கலக்கப்படுகிறது. கேள்வி என்னவெனில், இது நம்மை அசுத்தப்படுத்துமா? ஸ்திரீயானவள் விசுவாசமுள்ளவளாய் இருந்தால், அவளுக்கு எந்த தீங்கும் நேரிடாததுபோல, நமக்கும் எந்த தீங்கும் நேரிடாது. ஆனால், அவள் களங்கம் உள்ளவளாய் இருந்தால், அவள் வயிறு வீங்கி கெட்டுப்போகும். அதுபோல, நாம் விசுவாசம் அற்றவர்களாக நிரூபிக்கப்பட்டால் நம்முடைய ஆண்டவரோடு வாழக்கூடிய வாழ்கையின் நம்பிக்கைகள் கெட்டுப் போய்விடும் (யோவா. 7:38-ம் வசனத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க).

எண்ணாகமம் ஆறாம் அதிகாரம் நசரேய விரதத்தைக்குறித்துப் பேசுகிறது. இக்காலத்தில் உடன்படிக்கை செய்த பரிசுத்தவான்கள் அவர்களின் வாழ்கையில், முடிவுபரியந்தம் செய்த பொருத்தனை களை விசுவாசத்தோடு நிறைவேற்றுவதை இது சித்தரிக்கிறது. அதற்குப் பின் சபை முழுமை பெறும்போது, எண். 6:23-27-ல் குறிப்பிட்டப்படி தேவன் அனைவரையும் ஆசீர்வதிப்பார்.

### எண்ணாகமம் ஏழாம் அதிகாரம்

இந்த அதிகாரம், "இஸ்ரயேலின் பிரபுக்களைக் குறித்து எண். 7:2-ல் பேசுகிறது. ஒவ்வொரு கோத்திரத்தின் ஒவ்வொரு பிரபுவும் தன்னுடைய கோத்திரத்தின் சார்பாக ஆசரிப்புக் கூடாரம் பணிக்கென்று காணிக்கைகளைக் கொடுக்க வேண்டியதாயிருந்தது. கொடுக்க வேண்டிய காணிக்கைகளின் அளவுகளும் விவரங் களும் இவ்வளவு என்று கொடுக்கப் பட்டிருந்தது. ஒவ்வொருவரும் சமமாகக் கொடுத்தார்கள் (எண். 7:12-17). எண்ணாகமம் ஆறாம் அதிகாரம் நம்மை, சுவிசேஷ யுகத்தின் முடிவிற்கும், நசரேய பொருத்த னைகளின் சபையின் முடிவுக்கும் கொண்டுவரும்

(இதை நீசான் மாதம் என்றும் அழைப்பார்கள்) இரண்டாம் மாதத்தின் துவக்கத்தில் இஸ்ரயேலர்களின் கணக்கு எடுக்கப்பட்டது (எண். 1:1). சில இஸ்ரயேலர்கள் அசுத்தமான சூழ்நிலை களினிமித்தம் சமீபத்தில் ஆசரிக்கப்பட்ட பஸ்காவில் கலந்துகொள்ளவில்லை என்று கண்டுபிடிக்கப பட்டது. "அந்நாளில் சிலர் மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டபடியினால் பஸ்காவை ஆசரிக்கத்த காதவர்களாயிருந்தார்கள்; அவர்கள் அந்நாளிலே மோசேக்கும் ஆரோனுக்கும் முன்பாக வந்து" (எண். 9:6, 7), இந்த சூழ்நிலைகள் விவரிக்கப்பட்டு இதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி கேட்கப்பட்டது.

மோசே இக்காரியத்தை தேவனிடம் கொண்டு வந்தார். இதை தவறாமல் ஆசரிக்க வேண்டும் என்று தேவன் மோசேயிடம் பதிலளித்தார். முதலாம் மாதம் தங்களை சுத்திகரிக்காமல் இருப்பவர்கள், இரண்டாம் மாதம் பதினான்காம் தேதியில் ஆசரிக்க வேண்டும் என்று கூறினார் (எண். 9:9-13).

தெய்வீக திட்டத்தில் இரண்டு முறை இயேசுவின் பலியின் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் காரியம் மிக அருமையாக சித்தரிக்கப்படுகிறது. சுவிசேஷ யுகத்தில் பரிசுத்தவான்களுக்கும் ஆயிரம் வருஷம் ஆட்சியில் உலகத்திற்கும், ஆதாமின் மரணத்தின் மூலமாக அசுத்தமாக்கப்பட்ட இந்த உலகம் விசுவாச குறைச்சலினால், தேவனைவிட்டு இந்த உலகம் நீண்ட பிரயாணமாய் சென்றிருக்கிறார்கள் (எண். 9:10). ஆனால், அடுத்த முழு நிலவு இரவின் போது - ஆயிரம் வருஷம் ஆட்சியில் இந்த முழு உலகமும் ஜீவனைப் பெறுவதற்கு பஸ்காவை ஆசரிக்க வேண்டும். இரண்டாம் மாதம் ஆசரிக்கப்படும் பஸ்கா, ஆயிரம் வருஷம் ஆட்சியில் இரண்டாவது முறை முழு உலகமும் மீட்கப்படுவதை அடையாளப்படுத்துகிறது.

**தொடர்ந்து வரும் பாடங்கள்**

எண்ணாகமத்தின் புத்தகம், இஸ்ரயேலர்கள் வனாந்தரத்தில் பயணித்த பயணத்தைக்குறித்தும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைவதற்கான ஆயத்தத்தைக்குறித்தும் விவரிக்கிறது. இப்படியாக இந்த புத்தகம் சுவிசேஷ யுகத்தின் அடையாளங்களையும், அதை தொடர்ந்து வரும் ஆயிரம் வருஷம் ஆட்சியின் ஆசீர்வாதங் களையும் அடையாளப்படுத்துகிறது. முதல் ஒன்பது அதிகாரங்களில், நாம் பார்த்தபடி ஒன்றுக்குப் பின் ஒன்றான பாடங்களின் வரிசைகளைப் பார்ப்போம்.

முதல் நான்கு அதிகாரங்கள் சுவிசேஷ யுகத்தின் துவக்கத்தை, இஸ்ரயேலர்களின் பிரகாரத்தை அறிமுகப்படுத்துகிறது. (கிறிஸ்தவ சமுதாயம்) மேலும், லேவியர்களும் அவர்களின் பணிகளையும் குறிப்பிடுகிறது. (சுவிசேஷ யுகத்தில் உடன்படிக்கை செய்தவர்கள்) ஐந்தாம் அதிகாரம், சுவிசேஷ யுகத்தில் உடன்படிக்கை செய்த சபையின் அங்கத்தினர்களின் சோதனையை அடையாளப் படுத்தும்படியான ஒரு பரீட்சை குறிப்பிடப்படுகிறது. ஆறாம் அதிகாரம், சுவிசேஷ யுகத்தின் வேலைகளை மொத்தமாக விவரிக்கும்படி நசரேய விரதத்தின் சகல குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குப் பின் யுகம் முடிவடைந்து, கிறிஸ்துவின் ஆயிரம் வருஷம் ஆட்சி துவங்குகிறது. ஏழாம் அதிகாரத்தில், பழைய ஏற்பாடு நீதிமான்கள் அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். எட்டாம் அதிகாரத்தில், திரளான கூட்டம் அறிமுகப் படுத்தப்படுகிறார்கள். ஒன்பதாம் அதிகாரத்தில், உலக மனுக்குலம் பஸ்காவை ஆசரித்து கிறிஸ்துவின் இரட்சிப்பின் கிரயத்தின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வார்கள்.

இரண்டு பறவைகள் கொண்டுவரப்பட்டது. ஒன்று பலி செலுத்தப்பட்டு அதின் இரத்தத்தை ஊற்று தண்ணீரில் கலக்கப்பட்டது. (ஜீவ தண்ணீர்) அந்த தண்ணீர் குஷ்டரோகி மேலும் உயிருள்ள மற்ற பறவை மேலும் தெளிக்கப்பட்டது. அதற்குப் பின் அந்த பறவை விடுதலை ஆக்கப்பட்டது. பாவத்திலிருந்து கிடைக்கப்பெறும் தனி மனித இரட்சிப்பை இக்காரியம் மிக அழகாக சித்தரிக்கிறது. அழைப்பின் குரல் கேட்டு, அதற்கேற்ற பதில் அளித்து ஜெநிப்பிக்கப்படும்போது, நாம் இம் மீட்பைப் பெற்று, மீட்கப்பட்ட ஜனங்களின் ஒரு பகுதியாக மாறிவிடுகிறோம். ஆனால், பழங்காலத்து குஷ்டரோகிகளைப்போல நாம் நம்முடைய வீடுகளுக்கு திரும்புவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இக்காலத்தில் நம்முடைய மீட்பின் நாட்களில் கிறிஸ்தவர்களாகிய நமக்கு இந்த பூமியின் மேல் நித்தியமான வாசஸ்தலம் இல்லை என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

ஏழாம் நாளில் புண்கள் ஆறின பின்பு, குஷ்டரோகிகள் கழுவப்பட்டு மீண்டுமாக தங்களுடைய குடும்பங்களுக்கு திரும்பினார்கள். மனித வரலாற்றின் ஏழாம் நாளாகிய ஆயிரம் வருஷம் ஆட்சியில் அனைவரும் பாவத்திலிருந்து மீட்கப்படுவதை இது அடையாளப்படுத்துகிறது.

இருந்தபோதிலும், பாவத்திற்கான முழுமையான விடுதலை, ஆயிர வருட யுக இறுதி சோதனைக்குப் பின் வரும் எட்டாம் நாளுக்கு முன் நடைபெறாது. எட்டாம் நாளில் பாதிக்கப்பட்ட குஷ்டரோகி ஒரு ஆட்டுக்குட்டியையும், எண்ணெயையும், போஜனத்தையும் கொண்டுவர வேண்டும். அந்த ஆட்டின் இரத்தம் அவனுடைய வலது கட்டை விரலிலும், வலது காதின் மடலிலும் பூசப்பட்டது. தேவனுக்கும் அவருடைய பணிக்கும் பிரதிஷ்டை பண்ணப்பட்ட ஆசாரியர்களுக்கும் இப்படியாகவே செய்யப்பட்டது. அதற்குப் பின் இந்த மூன்று உறுப்புகளும் எண்ணெயினால் அபிஷேகிக்கப்பட்டது. இறுதியாக மீதமுள்ள எண்ணெயை அவர் தலையில் ஊற்றினார்கள். ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு தேவனுடைய ஆவியினால் நடப்பதற்கும், கிரியை செய்வதற்கும் தேவனோடு தொடர்பு கொள்ளக்கூடிய அனுமதியை மனுக்குலம் பெற்றதை இது காட்டுகிறது.

இந்த செயல்முறை, லேவியராகமம் 14-ம் அதிகாரத்தில் காணப்படுகிறது. இப்படியிருக்க, எல்லா "குஷ்டரோகிகளையும்" பாளயத்திலிருந்து புறம்பாக்கப்பட வேண்டும் என்று கூறப்படுவதன் காரணம் என்ன? எண்ணாகமம் ஐந்தாம் அதிகாரம் கிறிஸ்தவ யுகத்தை அடையாளப்படுத்துவதை நாம் உணர்ந்து கொண்டால் மட்டுமே தேவன் மோசேயிடம் கூறின இந்த விநோதமான அறிவிப்பை புரிந்துகொள்ள முடியும். சபை மாம்சத்தில் இருக்கும் காலத்தின் போது பல ஜனங்களில் காணக்கூடிய பாவத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதை இது கூறுகிறது. இவைகள் வெறுமையாக சபைக்குள் பொருத்திப் பார்க்க இயலாது. ஏனெனில், சபைக்குள் சீர் பொருந்தப்படாத, தங்களை அர்ப்பணிக்காத ஜனங்கள் அனைவரும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு அபாயத்தை விளைவிக்கும் கிறிஸ்தவ சமுதாயமாக இருப்பார்களே! "கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா?" (1 கொரி. 5:6).

வரலாற்றில் பெயரளவில் கிறிஸ்தவ சபை என்று அழைக்கப்படும் அமைப்பே நிச்சயமாக இந்த விளக்கத்திற்கு ஆதரவு அளிக்கக் கூடியதா யிருக்கிறது. சபையாகிய கோதுமை வயலுக்குள், போலி கிறிஸ்தவர்களாகிய களைகளை சத்துரு விதைத்ததிலிருந்து - சீயோனுக்குள் பாவிகளும் தங்களுடைய ஓட்டத்தை தொடர்ந்துள்ளார்கள். இவர்கள் காலங்களையும் பிரமாணங்களையும் மாற்றி, சமாதானத்துக்குரிய ஆட்டுக்குட்டியை போருக்குரிய மிருகமாக்கி, அப்போஸ்தலரின் தூய்மையான உபதேசங்களை மரணத்திற்குரிய கெட்டுப்போன உபதேசங்களாக இருண்ட யுகங்களில் மாற்றினார்கள். இவர்கள் தேவனுடைய ஜனங்களை குருடாக்கி, கோதுமை மணிகளை மிக தாழ்மையோடு அரைக்கும்படி செய்து, தாங்களோ வல்லமை மற்றும் ஆவிக்குரிய பெருமையின் போதையினால் தங்களை நிரப்பிக் கொண்டார்கள். (இக்காரியத்திற்கு இசைவாக தானியேல் தீர்க்கதரிசனத்தில் 7:25 மற்றும் வெளி. 6:1-8 மற்றும் நியா. 16:21-30 வரை, சபைக்கு நிழலாகக் காட்டப்பட்டிருக்கும் சிம்சோனின் வாழ்கையை ஒப்பிட்டுப் பார்க்கலாம்).

எண்ணாகமம் ஐந்தாம் அதிகாரத்திலுள்ள சில வசனங்கள் அடையாளமான சபையை வெளிப்படுத்துகிறது. அதாவது, ஜீவனோடு பிரதிநிதிகளாக ஆசாரியர்கள் அடையாளப்படுத்தப் படுகிறார்கள். (உண்மையான சபையில் பேராயர்கள் மற்றும் உயர்நிலை கொண்டவர்கள் போன்ற நிலைகள் ஒன்றுமில்லை. சகல விசுவாசிகளும் ஆசாரியர்களாக சித்தரிக்கப்படுகிறார்கள். மேலும், பரிசுத்த ஸ்தலத்தில் புசிப்பது, சத்தியமாகிய அப்பங்களை பகிர்ந்து கொடுப்பது, விளக்கேற்றுவது, எண்ணெய் ஊற்றுவது, திரியேற்றுவது போன்ற முக்கியமான வேலைகள் நடத்துவதை இவர்கள் முக்கிய பணியாகக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், சபையின் ஏழு காலங்களை, விளக்குத் தண்டின் ஏழு கிளைகளை

கிருபையையும் கிறிஸ்துவுக்குள் நம்முடைய சகோதரர்கள் பலமுறைகள் நமக்கு காட்டக்கூடிய கிருபைகளையும் நாம் புரிந்துகொள்ள துவங்குவோம்.

நமக்காக ஒருவர் ஜெபிக்கும் போதும், ஆவிக்குரிய உணவுகளை அளிக்கும் போதும், நம்முடைய வழியை ஜீவனுள்ள தண்ணீரினால் கழுவும் போதும், பெருமை என்ற இருளான தனிமையில் ஒருவர் சத்தியமாகிய விளக்கைக் கொளுத்தி வைக்கும் போதும் அல்லது ஆவிக்குரிய ஐக்கியத்தில் நுழைவதற்காக ஒருவர் நமக்காக திரைச்சீலையை விலக்கும் போதும், நாம் நம்முடைய மனப்பூர்வமான பலிகளை இவர்களுக்கும் மற்ற சகோதர சகோதரிகளுக்கும் தேவையான பெலனை பெரும்படியாக நாம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். "எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்" (நீதி. 11:25). இப்படி செய்வதினால், பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில் வளர்ச்சிக்குள்ளாக்குவதினிமித்தம் நாம் தேவனுக்கு பணி செய்யமுடியும் (எபே. 1:18).

**பொறாமையின் பிரமாணம்**

எண். 5:11-31 வசனங்களில் ஆழமானதும் அடையாளமுமான ஒரு செய்தி உள்ளது. சபையின் வளர்ச்சிக்காக அனுமதிக்கப்படும் சோதனைகளையும் இதினிமித்தம் இறுதியாக கிறிஸ்துவின் சபைக்குக் கிடைக்கும் வெற்றியையும் மிக அழகாக சித்தரிக்கப்படுகிறது.

மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் விபச்சாரம் என்ற பாவத்திற்கு புருஷன் மற்றும் ஸ்திரீ இருவருக்கும் சமமான தண்டனை வழங்கப்பட்டது (உபா. 22:21-22). (எடுத்துக்காட்டாக, ஆதியாகமம் 1 முதல் 3 அதிகாரங்களுக்குள் தேவனுக்கு முன்பாக இரு பாலினரும் சமமாக நடத்தப்பட்டதற்கு கிட்டதட்ட இருபத்து நான்கு எடுத்துக்காட்டுக்கள் உள்ளது. மேலும், தேவனுடைய வார்த்தைகளில், "ஸ்திரீ மற்றும் புருஷன் கர்த்தருக்குள் ஒன்றாய் இருக்கிறார்கள்" என்பதையும் நாம் காண்கிறோம்). ஆனால், பழங்காலத்து உலகம் இரு பாலினரையும் வெவ்வேறு விதமாய் நடத்தியது. (பாபிலோனிலும், எகிப்திலும், ரோமாபுரியிலும் மற்றும் கிரேக்க பட்டணத்திலும் விபச்சாரம் செய்த ஸ்திரீகள் கல்லெறியப்பட்டும் அல்லது கொளுத்தப்பட்டும் அல்லது தண்ணீரில் மூழ்கடிக்கப்பட்டும் கொல்லப்பட்டனர். ஆனால், திருமணமான புருஷர்கள் மற்றவர் மனைவியோடு வேசித்தனம் செய்தால் மட்டுமே தண்டிக்கப்பட்டனர். மற்ற சூழ்நிலைகளில் அடிமைகளோடும், விபச்சாரிகளோடும் உறவு வைத்துக் கொள்வது தவறாக எண்ணப்படவில்லை).

எண்ணாகமம் ஐந்தாம் அதிகாரம், புருஷர்கள் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டாமல் இருப்பது விநோதமாக இருக்கிறது அல்லவா? ஒரு புருஷன் மனைவியின் சந்தேகத்திற்கு ஆளாகலாம் அல்லவா? புருஷன் ஆதிக்கம் கொண்டிருக்கும் இந்த உலகத்தில் ஸ்திரீகளைக் காட்டிலும் புருஷர்கள் அதிகமாக தவறு செய்து ஏமாற்றுகிறவர்களாக இருக்கலாம் அல்லவா? வேதாகமம் ஒரு மனுஷ படைப்பு அல்ல. மேலும், காலங்களுக்குரிய கலாச்சாரங்களை பிரதிபலிக்கக்கூடிய புத்தகமும் அல்ல. எண்ணாகமம் ஐந்தாம் அதிகாரம் சபைக்கு தேவையான ஆவிக்குரிய பாடத்தை மட்டுமே நமக்கு கற்பிக்கிறது.

ஏனெனில், "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" (1 கொரி.10:11) என்று அதற்குப் பின்னாக வந்த பவுல் நமக்கு அறிவுறுத்துகிறார்.

**கடுமையான நியாயத்தீர்ப்பு**

இந்த பகுதியில் ஒரு உண்மையான பிரச்சனையை சமாளிப்பதற்காக மோசேயை தேவன் ஆயத்தப்படுத்துகிறார்; ஒரு மனைவியை சந்தேகப்பட்டதினிமித்தம் அவள் புருஷன் மிகவும் கோபமடைந்திருக்கிறான். ஆனால், அவனால் நிரூபிக்க முடியவில்லை. அக்காலத்தில் அவள் கருவுற்றாலும் அந்த கரு அவளுடைய புருஷனுடையதா என்று கண்டுபிடிப்பதற்கான கருவிகள் அன்று இல்லை.

மற்ற சமுதாயங்களில், இப்படிப்பட்ட கடுஞ்சோதனைகள் வேறுவிதத்தில் நடத்தப்பட்டது. "அக்கினியினால் சோதித்தல்," எடுத்துக்காட்டாக, சந்தேகத்திற்குரிய ஸ்திரீ ஒன்பது அடி நீளம் கொண்ட எரிகிற தழலைக் கடக்க வேண்டியதாயிருந்தது. எந்தவிதமான காயங்கள் ஏற்படாவிட்டாலும் அல்லது 3 நாட்களுக்குள் அந்த காயங்கள் ஆறினாலும் அவள் நிரபராதி என்று நிரூபிக்கப்படுவாள். மற்றொரு முறை, கொதித்துக் கொண்டிருக்கும் தண்ணீர் அல்லது எண்ணெயிலிருந்து ஒரு கல்லை கைகள் காயப்படாமல் எடுக்க வேண்டியதாயிருந்தது. இந்த பரிதாபமான ஆத்துமாக்கள் நிரபராதிகள் என்று நிரூபிக்கப்படும்வரை குற்றவாளிகளாக எண்ணப்பட்டார்கள்.

ஆனால், தெய்வீக பிரமாணத்தில் இப்படிப்பட்ட காரியங்கள் கொடுக்கப்படவில்லை. எண்ணாகமம் ஐந்தாம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்ட தொகுப்பில், சந்தேகத்திற்குரிய ஸ்திரீக்கு எந்தவிதமான மனித

செலவழிக்கப்படலாம். ஒருவேளை, நம்முடைய ஆன்மீகக் காரியங்களில், நம்மை நீதிமானாக்கப்பட்ட நிலைமையில் வளரக்கூடிய காரியங்களில் நம்முடைய இரட்சகராகிய மணவாளன் சரியாக புரிந்துகொள்ளக் கூடியவராக இருக்கிறார்.

நம்முடைய உண்மையற்ற நிலைக்கு காரணமாயிருக்கக்கூடிய எதுவனாலும் சரி - நம்முடைய விசுவாசம் பிரிக்கப்பட்டதை மணவாளன் நன்கு அறிவார். சகலவிதங்களிலும் நம்மிடத்தில் விசுவாசத்தை எதிர்பார்ப்பதற்கு அவர் உரிமை பெற்றிருக்கிறார்.

நிச்சயமாக, பரலோகத்திலுள்ள நம்முடைய இரட்சகர் உண்மைகளை அறிந்திருக்கிறார். நம்முடைய இருதயங்களையும் அறிந்திருக்கிறார். ஆனால், அவருடைய சரீரத்தின் ஒரு பகுதி இந்நாள் வரைக்கும் மாம்சத்தில் உள்ளது. அந்த அவயவங்கள் இன்னும் இரட்சகரின் தலையோடு நேரடியாக இணையவில்லை. அனைத்து சத்தியங்களையும் முழுமையாக நம்முடைய இருதயங்கள் அறியாததினால் நாம் மன்னிப்பைப் பெறலாம். ஆனால். நம் இருதயத்திற்குள் காணப்படும் ஒழுக்கம் உண்மையானதா அல்லது பொய்யானதா என்று கண்டிப்பாக வெளிப்படும் - நம்முடைய வழிகளில் நாம் குடிக்கக்கூடிய அந்த கசப்பான தண்ணீர் வழியாகவே இக்காரியங்கள் வெளிப்படுத்தப்படும். நாம் குற்றமற்றவர்களாயிருந்தாலும் மற்றவர்கள் நம்மேல் சாட்டும் குற்றத்தை பொறுமையோடு கேட்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

மீண்டுமாக சரீர அங்கத்தினர்களை அடையாளப்படுத்தும் ஆசாரியன் நம்மை நியாயந்தீர்க்க முயற்சிக்கவும் கூடாது, அவர் அதற்கு அனுமதிக்கப்படவும் இல்லை. தேவனே அவருடைய நியாயத்தை வெளிப்படுத்துவார். சரீர அங்கத்தினர்களாகிய நம்முடைய சகோதரர்கள் ஜீவ தண்ணீரோடு அழுக்கான புழுதியையும் நமக்கு கலந்து கொடுப்பார்கள். மேலும், புளிப்பான குற்றச்சாட்டுக்களை நம்மேல் சுமத்தும்படியாக அந்த கசப்பான தண்ணீரில் எழுதப்பட்ட மையையும் கலப்பார்கள்.

இது எவ்வளவு அழகாக பொருத்தப்படுகிறது! சபை வாழ்கையில் பலவிதமான "அழுக்குகள்" உள்ளது. மாய்மாலம், மறைவான பாவங்கள், ஆவிக்குரிய பெருமை, உணர்வற்ற நிலை, தவறாய் வழிநடத்தும் தலைமைத்துவம் போன்ற கிருமிகள்... ஒருவர் நமக்கு தெளிவான சத்தியத்தைக் கொடுக்க முயற்சித்தாலும், அதை கொடுக்கும் விதத்தின் வழியாக அந்த தண்ணீர் அழுக்காகிவிடலாம்.

இப்படிப்பட்ட உண்மைகளை முகமுகமாய் வெளிப்படுத்தும் காரியம் தவிர்க்கமுடியாததாய் உள்ளது. "அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்" மத். 24:12-ல், இயேசுவும் இதை குறித்து விவரிக்கிறார்.

நாம் அந்த அழுக்கான தண்ணீரைக் குடித்தாலும், வியாதிப்படாமலிருந்தால் நம்மை நாம் விசுவாசம் உள்ளவர்களாக நிரூபிக்கலாம் என்று எண்ணாகமம் ஐந்தாம் அதிகாரம் கூறுகிறது. ஆகவே, நாம் சரியானப் பாதையில் நடக்கவும், கிரியை செய்யவும், ஒருவர் பாரத்தை ஒருவர் தாங்கவும், ஒருவருக்கொருவர் மன்னிக்கவும், ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவும், சரீர அங்கங்களுக்கு ஊழியம் செய்யவும் மற்றும் நாம் அழிந்துவிடாதபடிக்கு தேவனுடைய பராமரிப்பையும், பாதுகாப்பையும் விசுவாசிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். வேதனைகள் மற்றும் நம்மை தனிமையில் வாட்டும் உபத்திரவங்களின் மத்தியிலும் இவைகளில் நாம் நிலைத்திருக்க வேண்டும்.

நம்முடைய வாழ்க்கையில் தேவன் அழைத்து வந்த சகோதரர்கள் காரணமற்றதும், ஆதார மற்றதுமான அநேக குற்றசாட்டுகளை நமக்கு எதிராக சுட்டிக்காட்டலாம். நம்முடைய ஆூரண நிலையை நாம் மனதில் கொண்டவர்களாக, நமக்காக பரிந்து பேசுகிறவருடைய வல்லமையையும் அவர் நம்மேல் வைத்திருக்கும் அசைக்கமுடியாத அன்பை விசுவாசிக்கக் கூடியவர்களாக நாம் இப்படிப்பட்ட கசப்பான சபை அனுபவங்களோடு ஜீவிக்க கற்றுக்கொண்டு நீதியை நிலைநிறுத்துவதற்காக தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். நம்முடைய சக ஊழியக்காரர்கள் நம்முடைய முக்காட்டை நீக்கினாலும் (வச. 18), மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், நமக்கு நியமிக்கப்பட்ட மணவாளனுக்கு அவிசுவாசமாக நடந்து கொள்ளுகிறோம் என்று நம்மை நம்முடைய சகோதரர்கள் சோர்வுபடுத்தினாலும் - நாம் தேவனுடைய ஒழுங்கைவிட்டு விலகாமலும் இருக்க வேண்டும். நாம் அழைக்கப்பட்ட அழைப்பின் இரட்சிப்பின் செயல்முறைகளை எப்பொழுதும் விட்டுவிடாமல் இருக்கக்கடவோம்.

நம்முடைய ஐக்கியத்தை நாம் பெருக்கிக்கொண்டே போகையில், மாய்மாலம் செய்கிறவர்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு குற்றச்சாட்டுகளை உடையவர்களாக இருந்தாலும் சரி, அப்படிப்பட்ட தேவ ஜனங்களையும் விட்டு நாம் விலகி கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். சரீரத்தில் உள்ள நம்முடைய எதிராளிகளுக்காக ஜெபிக்கக்கூடிய பலத்தையும்,

அர்ப்பணிப்பு

# நசரேய விரதம்



"புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கர்த்தருக்கென்று விரதம் பண்ணிக்கொண்டவர்களாயிருக்கும்படி நசரேய விரதமாகிய ஒரு விசேஷித்த பொருத்தனையைப் பண்ணினால்" (எண். 6:2).

George Tabac

எண்ணாகமம் ஆறாம் அதிகாரத்திலுள்ள நசரேய விரதம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கடைபிடிக்கக் கூடியதாய் இருந்தது - ஒரு மாதம் அல்லது ஒரு வருடம் - அல்லது வாழ்நாள் முழுவதும் கடைபிடிக்கப்பட்டது. தங்கள் வாழ்நாள் முழுவதும் நசரேய விரதத்தைக் கடை பிடித்த மூன்று நபர்களைக்குறித்து வசனங்கள் கூறுகிறது - சிம்சோன், சாமுயேல் மற்றும் யோவான்ஸ்நானன்.

**எண்ணாகமம் 6:1-8.** "கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கர்த்தருக்கென்று விரதம் பண்ணிக்கொண்டவர்களாயிருக்கும்படி நசரேய விரதமாகிய ஒரு விசேஷித்த பொருத்தனையைப் பண்ணினால், அப்படிப்பட்டவன் திராட்சரசத்தையும் மதுபானத்தையும் விலக்கக்கடவன்; அவன் திராட்சரசத்தின் காடியையும் மற்ற மதுபானத்தின் காடியையும், திராட்சரசத்தினால் செய்த எவ்விதமான பானத்தையும் குடியாமலும், திராட்சப் பழங்களையாவது திராட்ச வற்றல்களையாவது புசியாமலும், தான் நசரேயனாயிருக்கும் நாளெல்லாம் திராட்சச்செடி விதைமுதல் தோல் வரையிலுள்ளவைகளினால் செய்யப்பட்ட யாதொன்றையும் புசியாமலும் இருக்கக்கடவன்.

"அவன் நசரேய விரதங்காக்கும் நாளெல்லாம் சவரகன் கத்தி அவன் தலையின்மேல் படலாகாது, அவன் கர்த்தருக்கென்று விரதங்காக்கும் காலம் நிறைவேறுமளவும் பரிசுத்தமாயிருந்து, தன் தலைமயிரை வளரவிடக்கடவன். அவன் கர்த்தருக்கென்று விரதங்காக்கும் நாளெல்லாம் யாதொரு பிரேதத்தண்டையில் போகக்கூடாது. அவன் தன் தேவனுக்கென்று செய்த நசரேய விரதம் அவன் தலைமேல் இருக்கிறபடியால், மரணமடைந்த தன் தகப்பனாலாகிலும் தாயினாலாகிலும் சகோதரனாலாகிலும் சகோதரியினாலாகிலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது. அவன் நசரேயனாயிருக்கும் நாளெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருப்பான்."

முழுமையாகவும், தேவனுக்கு உச்சிதமான நிலையில் பணி புரிய, முழுமையாக அர்ப்பணிப்பதற்கு, வேதாகமத்தில் இதுவே மிகுந்த அற்புதமான ஒரு நிழலாகும். சிறுமந்தையின் ஒவ்வொரு அங்கங்கத்தினரும் திரைக்கு அப்பால் செல்வதற்கு தேவைப்படும் ஒவ்வொரு காரியங்களையும் இது அடையாளப்படுத்துகிறது.

**மனமுவந்து**

"புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கர்த்தருக்கென்று தங்களையே பிரித்துக் கொண்டு நசரேய விரதத்தைக் கடைபிடிப்பவர்கள்..." இந்த அர்ப்பணிப்பு அல்லது இந்த விரதம் கட்டாயமானது அல்ல என்பதையும் அது முழுமையாக சுய விருப்பத்திற்கு விடப்பட்டதையும் குறிப்பிடுகிறது. ஆகவே, விருப்பமுள்ளவர்கள் இவ்விரதத்தைக் கடைபிடிப்பார்கள்.

நாமும்கூட இப்படியாக இருக்க வேண்டும். நம்முடைய அர்ப்பணிப்பும் சுய விருப்பமாகவே இருக்க வேண்டும். தேவனுடைய படைப்பாக நம்முடைய ஜீவனை; மகிழ்ச்சியோடும், சந்தோஷத்தோடும் மனப்பூர்வமான முழுமனதோடும், நம்முடைய ஜீவனைக் கொடுக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். இதை தவிர, பயத்தினாலோ, எதிர்பார்ப்பினாலோ அல்லது மற்ற காரணங்களுக்காகவோ நாம் நம்மை அர்ப்பணித்திருந்தால் - எந்தவகையிலும் நம்முடைய அர்ப்பணிப்பு தேவனுக்கு பிரியமாயிருக்காது. நம்முடைய அர்ப்பணிப்பு மனப்பூர்வமான சந்தோஷத்தினால் நம்முடைய சரீரத்தை ஊடுருவ வேண்டும்.

நாசர் என்பதே "நசரேய" என்ற வார்த்தையின் எபிரெய சொல்லாகும். ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பிரித்து அல்லது அர்ப்பணிப்பதே என்பது அதன் பொருளாகும். எந்த நோக்கத்திற்காக? "தேவனிடத்தில் சேருவதற்காக தங்களை பிரித்துக்கொள்வது." "பிரித்துக் கொள்வது" என்ற வார்த்தை - "ஒரு புருஷன் அல்லது ஒரு ஸ்திரீ தங்களை தாங்களே பிரித்துக் கொள்வது." ஒரு அற்புதமான அல்லது விதிவிலக்கான அல்லது இயல்புக்கு மாறான காரியங்களைச் செய்வதே இதின் பொருளாகும். இந்த வார்த்தையின் மூலப்பொருளை ஏசா. 9:6-ல் காணலாம். அதில் இயேசுவுக்கு "அற்புதம்" என்றும் ஒரு பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

சித்தத்தை செய்வதிலிருந்தும் நம்மை வெளியே இழுத்து செல்லுகிறதா? என்பவைகளை ஆராய வேண்டும். தேவனைவிட்டு விலகச் செய்யக்கூடிய எந்த காரியமானாலும்சரி நாம் கட்டாயமாக அதை தவிர்க்க வேண்டும்.

நசரேய விரதத்தைக் கடைபிடிப்போர் திராட்சரசத்தை மட்டுமல்ல, "பதப்படுத்திய திராட்சப்பழங்களைக்" கூட புசிக்கக்கூடாது என்ற காரியம் குறிப்பிடப்பட்டதாய் இருக்கின்றது. மேலும், காய்ந்துபோன திராட்ச வற்றல்களிடமிருந்து கூட விலகியிருக்க வேண்டியதாயிருக்கிறது. ஒரு காய்ந்த திராட்சக் குலையை மட்டுமல்ல அதில் **ஒரு** காய்ந்த திராட்சையையும் கூட புசிக்கக்கூடாது.

திராட்சரசத்தை மட்டுமல்ல, அதை சார்ந்த எந்த பொருட்களையும் தவிர்ப்பதற்கு நம்முடைய கண்கள் எப்பொழுதும் கவனித்திருக்க வேண்டும்.

சிறிய பாவங்களுக்கு நம்மை வழி நடத்தும் சிறிதளவான பூமிக்குரிய சிற்றின்பங்கள் மிகப் பெரிய பாவங்களுக்கு வழிநடத்த வாய்ப்புண்டு. நாம் அனைவரும் ஒரு தற்காலிகமான காலத்தைக் கடந்து கொண்டிருக்கிறோம். பல நன்மையான பூமிக்குரிய இன்பங்களை அனுபவிக்கலாம். ஆனால் புது சிருஷ்டிகள், இப்படிப்பட்ட பல காரியங்களை விட்டுக்கொடுத்து வாழ்வது அவர்களின் வளர்ச்சிக்கு பயனுள்ளதாய் இருக்கும். இந்த பூமிக்குரிய பகட்டுகளில் வெகு எளிதில் பிடிப்படலாம். பிள்ளைகள் கேட்கக்கூடிய சகல காரியங்களையும் கொடுப்பதிலிருந்து இது துவங்குகிறது. புதிதான திருமணம் செய்த தம்பதியர்கள் நியாயமான பல காரியங்களைத் தேடுவார்கள். வீடு, வேலை, அதற்குப் பின் பூமிக்குரிய காரியங்களின் மதிப்பு கொஞ்சம் கொஞ்சமாக ஆவிக்குரிய மதிப்புகளைக் காட்டிலும் உயரத் துவங்கும். நாம் பூமிக்குரிய வாழ்கையை சுபிட்சமாய் வாழும்பொழுது, பரலோக தந்தையின் ஆதரவை அதிகபட்சமாக எதிர்பார்க்கக்கூடிய வாய்ப்புகளை இழப்போம். நமக்கு எந்த குறைவும் இல்லையென்றால் நாம் தேவனை தேடுவதில் குறைவுள்ளவர்களாக இருப்போம். ஒருவேளை நாம் சில காரியங்களைப் பெற இயலவில்லையெனில் அவை இல்லாமல் வாழ்வது சுய-கட்டுப்பாடு என்று கூறலாமா? இல்லை! நாம் ஒரு காரியத்தை பெற்றிருந்தும் அதை நாம் ஆவிக்குரிய காரியங்களுக்காக இழக்க நேரிடும்போது, அதுவே உண்மையான சுய-கட்டுப்பாடாகும்.

ஆயினும், இவைகள் இங்கு முடிவு பெறுவதில்லை. குறிப்பாக நான்காம் வசனத்தைக் கவனிக்கவும். நசரேய விரதத்தைக் கடைப்பிடிப்பவர் திராட்சரசம், பதப்படுத்திய திராட்சப்பழங்கள் மற்றும் வற்றலான திராட்சக் குலைகளிலிருந்து மட்டும் விலகியிராமல், "தான் நசரேயனாயிருக்கும் நாளெல்லாம் திராட்சச்செடி விதைமுதல் தோல் வரையிலுள்ளவைகளினால் செய்யப்பட்ட யாதொன்றையும் புசியாமலும் இருக்கக்கடவன்." சிறிதளவான திராட்ச விதைகள் அல்லது அதின் தோல்களினால் செய்யப்பட்ட சிறிதளவான பொருட்களைக்கூட அவர் உண்ணக்கூடாமல் இருந்தது. உலகத்தின் சிற்றின்பங்கள் மற்றும் மாம்சீக இச்சைகளிலிருந்து முற்றிலுமாக விலகி, சோதனைகளைத் தவிர்த்து வீடு திரும்ப வேண்டும் என்று நம்முடைய பிதா எவ்வளவு பிரியமாக நம்முடைய விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். விதைளையும்கூட தவிர்க்க வேண்டும்! தேவனை விட்டு விலகச்செய்யக்கூடிய "விதையளவிலான" பாவமும் கூட நாம் அவசியமாக தவர்க்க வேண்டும்.

"நான் உலகத்திலிருந்தேனாகில், இந்த சத்தியத்தைக் கற்றுக்கொள்ளாமல் இருந்திருந்தால், நிச்சயமாக நான் மகிழ்ச்சியாக இருந்திருப்பேன் என்று எண்ணுகிறேன்..." (தொலைக் காட்சி, விளையாட்டு, பொழுது போக்கு, வீடுகள், உடைகள், வேலைகள், இன்னும் என்ன வேண்டுமானலும் சரி) இது லோத்தின் மனைவியின் நோக்கத்தைப்போல் தோன்றவில்லையா? - விட்டுவந்த சின்னசின்ன விருப்பங்களுக்காக சற்று திரும்பி பார்க்கக்கூடிய நிலையல்லவா? இப்படிப்பட்ட விதையளவு சிந்தையைக்கூட நாம் தவிர்க்க வேண்டும். இல்லையெனில், அவைகள் கிரியைகளாக, முளைகளாக, வெளியரங்கமாகக் கிளம்பும்.

நம்முடைய பரலோக பார்வையை மந்தமாக்கக்கூடிய சகல காரியங்களையும் நாம் அகற்றிவிடக்கடவோம். "தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்" (நீதி. 29:18). இந்த பார்வையை நாம் எப்பொழுதும் தொலைத்துவிடாமல் இருக்க வேண்டும். தேவனிடத்தில் நம்மை அழைத்து அவருக்கு ஊழியம் செய்யக்கூடிய விருப்பத்தை அவரை மட்டுமே நம்முடைய இருதயங்களிலும், சிந்தைகளிலும் கொழுந்துவிட்டு எரிவதற்கு தூண்டின காரியங்களை நாம் எப்பொழுதும் மறக்கக்கூடாது.

**சவரகன் கத்தியின்றி**

**எண்ணாகமம் 6:5.** "அவன் நசரேய விரதங்காக்கும் நாளெல்லாம் சவரகன் கத்தி அவன் தலையின்மேல் படலாகாது, அவன் கர்த்தருக்கென்று விரதங்காக்கும் காலம் நிறைவேறுமளவும்

விரும்புகிறோமா? ஒருவேளை இந்த சத்தியத்தின் அறிமுகமானது, நாம் பெற்றிருக்கும் அடிப்படை உரிமைகளையும், பொறுப்புகளையும் குறைத்துவிட்டாலும் நாம் சுவிசேஷத்திற்காக நம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோமா? நாம் சற்று நின்று, இந்த கேள்விகளை சிந்திப்போம்! நம்முடைய வாழ்கையில் அடிப்படையாக சுற்றியிருக்கும் காரியங்கள் என்ன? ஆகவே, நாம் தேவனோடு நடந்து கொண்டிருக்கிறோம் என்பதை மற்றவர்கள் அறிந்துகொள்ளும்படியான ஒரு வாழ்கையை வாழக்கடவோம்.

**மரித்தோரோடு உறவு கொள்வதை தவிர்த்தல்**

**எண்ணாகமம் 6:6-8.** "அவன் கர்த்தருக்கென்று விரதங்காக்கும் நாளெல்லாம் யாதொரு பிரேதத்தண்டையில் போகக்கூடாது. அவன் தன் தேவனுக்கென்று செய்த நசரேய விரதம் அவன் தலைமேல் இருக்கிறபடியால், மரணமடைந்த தன் தகப்பனாலாகிலும் தாயினாலாகிலும் சகோதரனாலாகிலும் சகோதரியினாலாகிலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது. அவன் நசரேயனாயிருக்கும் நாளெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருப்பான்."

நசரேய விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் தேவனுக்கென்றே தங்களை பரிசுத்தமாக அர்ப்பணித்ததினால், தங்களுடைய சொந்த குடும்பத்தினரானாலும் சரி, பிரேதத்தண்டையில் சேரக்கூடாது. அனைவருடைய பாவமும் ஆதி பாவத்தின் விளைவாய் இருக்கிறது. தன்னை அர்ப்பணிப்பவர் பரிசுத்தமும், உண்மையுமாய், தன்னைத்தானே பார்த்துக்கொள்வதற்கு, பாவ தன்மையுள்ள சகல காரியங்களோடு கொண்டிருக்கும் உறவை கட்டாயமாக தவிர்க்க வேண்டும் என்று இது நமக்கு வலியுறுத்துகிறது.

நாம் பாவம் நிறைந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், நாம் அவைகளில் பங்கெடுக்காமல் நாம் அவைகளை விட்டுப்பிரிந்து வாழ வேண்டும். "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவா. 17:15-17) என்று இயேசு கூறினார்.

கண்ணின் இமைகளினால் செய்யும் பாவத்தையும் நாம் கட்டாயமாக தவிர்க்க வேண்டும் என்று இயேசு கூறுகிறார். "உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு...உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத்தறித்து எறிந்துபோடு" (மத். 5:29-30). பாவத்தின் இயல்புகளையும் கூட கட்டாயம் தவிர்க்க வேண்டும் என்ற இயேசுவின் வல்லமையுள்ள வார்த்தைகளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நசரேய விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் நெருங்கிய உறவினர்களின் பிரேதத்தண்டையில் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறப்படுகிறது. தேவனைவிட்டு நம்மை பிரிக்கக் கூடிய நெருங்கிய பாவத்தின் செயல்களை நாம் கட்டாயமாக தவிர்க்க வேண்டும் என்ற பாடத்தை இது கற்பிக்கிறது. இந்த பாடத்தைக்குறித்து, "வேறொருவனை அவர் நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்; நீ போய், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி என்று" லூக்.9:59-60-ல் இயேசு குறிப்பிடுகிறார்.

உலகத்திலிருந்து பிரிந்து வாழ்வது எளிதல்ல, நாம் மற்றவர்களின் அங்கீகாரத்தைப் பெற விரும்புகிறோம். இந்த உலகத்தோடு இசைந்து போவதை எதிர்ப்பது சுலபமல்ல. ஆகவே, - மொழி, நாகரீகம், உடைகள், இசை - போன்ற இந்த உலகத்தின் வழிகளை நாம் ஏற்றுக்கொள்வதற்கு நாம் கட்டாயப்படுத்தப்படுகிறோம். இவைகள் நம் ஆவிக்குரிய வாழ்கையிலிருந்து பிரித்தாலும் சரி, நாம் இவைகளில் ஈர்க்கப்பட்டுப் போகிறோம். இவைகள் விசேஷமாக புதிதான சகோதர சகோதரிகளின் வாழ்கையில் நேரிடலாம். ஆனால், நம்முடைய வாழ்கையில் இப்படிப்பட்ட பாதிப்புகளை நாம் அனுமதிப்போமா?

"ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள், அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு," 2 கொரி. 6:17 என்று பவுலின் வார்த்தைகள் கூறுகிறது. உலகத்திலிருந்தும் அதின் ஆவியிலிருந்தும் நம்மை தேவன் அழைத்திருக்கிறார். இவ்விடத்தில் இந்த பாடத்தை நாம் பொருத்திப் பார்க்கலாம். நம்முடைய வாழ்கையைப் பிரித்து, எல்லா வழிகளையும் தேவனுக்கு அர்ப்பணித்து, அதற்கு நம்மை ஆயத்தம் பண்ணும்வகையில் நம்முடைய வாழ்கையில்

ஒரு வருஷத்து பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியையும், பாவநிவாரணபலியாக ஒரு வருஷத்து பழுதற்ற ஒரு பெண்ணாட்டுக்குட்டியையும், சமாதானபலியாக பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும்,"

நசரேய விரதத்தை முழுமையாக நிறைவு செய்யக்கூடிய காரியமானது, கிறிஸ்துவின் பள்ளியில் உடன்படிக்கை செய்த பரிசுத்தவான்கள் தங்களுடைய ஓட்டத்தை நிறைவு செய்வதை அடையாளப்படுத்துகிறது. அவர் மரணத்தில் தம்முடைய கண்களை மூடும் அந்த நேரத்திற்குப் பின் எல்லையில்லா மகிழ்ச்சிக்குள் அவர் கண்கள் திறக்கப்படுகிறது. ஆயினும், அவருடைய சுயத்தினாலல்ல, கிறிஸ்துவின் இரத்தத்தினால் இப்பங்கைப் பெற்றார் என்பதை நன்கு உணர்ந்திருப்பார். இதுவே, செம்மறியாட்டுக் குட்டியை அடையாளப்படுத்தப்படுகிறது. அந்நாள்வரைக்கும் பாவத்தில் கலந்திருக்கும் அவர் இயேசு செலுத்தின பாவ நிவாரண பலியின் தேவை எவ்வளவு அவசியம் என்பதை அவர் அறிந்திருந்தார்.

இந்த பலிகளோடு, "ஒரு கூடையில் எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத மெல்லிய மாவினால் செய்த அதிரசங்களையும், எண்ணெய் தடவப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும், அவைகளுக்கு அடுத்த போஜனபலியையும், பானபலிகளையும் கர்த்தருக்குத் தன் காணிக்கையாகச் செலுத்தக்கடவன்" என்று 15-ம் வசனம் கூறுகிறது.

அப்பம், அதிரசங்கள் மற்றும் அடைகள் - நீதிமானாக்கப்பட்ட நிலமையையும், சுத்திகரிக்கப் படும் நிலமையையும் மற்றும் மகிமையடைந்த நிலமையையும் அடையாளப்படுத்துகிறது - இவைகளின்றி ஒருவருடைய அர்ப்பணிப்பும் என்றும் நிறைவுபெறாது. புளிப்பில்லா அப்பமானது, நமக்குள் செலுத்தப்பட்ட இயேசுவின் நீதியைக் காட்டுகிறது. அதிரசங்களில் கலந்து பிசையப்பட்ட எண்ணெய், நம்மை கிறிஸ்துவை போல் மாற்றும் பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்துகிறது. இறுதியாக, எண்ணெய் பூசப்பட்ட அடைகள், சபை பெறக்கூடிய மகிமையை அடையாளப்படுத்துகிறது. ஆசாரியத் துவத்தின் பிரதிஷ்டையிலும் இம் மூன்று காரியங்கள் இதே அர்த்தத்தோடு காணப்படுகிறது.

**வசனங்கள் 17-18.** "ஆட்டுக் கடாவை கூடையிலிருக்கும் புளிப்பில்லாத அப்பங்களோடுங்கூடக் கர்த்தருக்குச் சமாதான பலியாகச் செலுத்தி, அவனுடைய போஜன பலியையும் பானபலியையும் படைப்பானாக. அப்பொழுது நசரேயன் ஆசரிப்புக்கூடாரவாசலிலே, பொருத்தனை செய்யப்பட்ட தன் தலையைச் சிரைத்து, பொருத்தனை செய்யப்பட்ட தன் தலைமயிரை எடுத்து, சமாதானபலியின்கீழ் எரிகிற அக்கினியில் போடக்கடவன்."

யூதர் பலிகளில், பாவ நிவாரண பலிகள் மற்றும் தகன பலிகள் தொடர்ந்து சமாதான பலிகள் செலுத்தப்பட்டது. ஆனால், நமக்கோ எல்லாவற்றிற்கும் முன்பாகவே கிறிஸ்து நமக்காக தேவனிடத்தில் சமாதானபலியை செலுத்திவிட்டார். இந்த உலகமோ சுவிசேஷ யுகத்தில் பலிகள் செலுத்தப்பட்டபின், சமாதானத்தைக் கண்டுபிடித்து ஆயிரம் வருஷம் ஆட்சிக்குள் தொடர்ந்து செல்வார்கள்.

சமாதான பலிகளைச் செலுத்துவதோடுகூட நசரேய விரதம் இருப்பவர்கள் தங்கள் தலையிலுள்ள மயிரை சிரைத்து, எரியும் நெருப்பில் சமாதான பலிக்குப் பின்பு எரித்து விட வேண்டும். தங்களுடைய ஓட்டத்தை விசுவாசத்தோடு முடித்து, பரலோக தந்தையாம் நம்முடைய தேவனுக்கு சகல கனத்தையும், மகிமையையும் கொடுக்கக்கூடிய காரியத்தை இச்சம்பவம் எவ்வளவு நேர்த்தியாக அடையாளப்படுத்துகிறது. ஏனெனில், அவருடைய அற்புதமான இரக்கமும், கிருபையும் முடிவில் ஆசீர்வாதங்களையுமே அந்த உடன்படிக்கையை நிறைவு செய்வதற்கு உறுதுணையாய் இருந்ததல்லவா? "தங்களுடைய கிரீடங்களை சிங்காசனத்திற்கு முன்பு வைத்த" 24 மூப்பர்களைப் பற்றி குறிப்பிடப்படும் (வெளி. 4:10)-ல் இச்சம்பவத்திற்கு இணையாகக் காணப்படலாம்.

**வசனங்கள் 19-20** "நசரேயன் பொருத்தனை செய்யப்பட்ட தன் தலைமயிரைச் சிரைத்துக் கொண்டபின்பு, ஆசாரியன் ஆட்டுக்கடாவினுடைய வேவிக்கப்பட்ட ஒரு முன்னந்தொடையையும், கூடையில் இருக்கிறவைகளிலே புளிப்பில்லாத ஒரு அதிரசத்தையும் புளிப்பில்லாத ஒரு அடையையும் எடுத்து, அவனுடைய உள்ளங்கைகளில் வைத்து, அவைகளைக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டக்கடவன்; அது அசைவாட்டப்பட்ட மார்க்கண்டத்தோடும், ஏறெடுத்துப் படைக்கப்பட்ட முன்னந்தொடையோடும், ஆசாரியனைச் சேரும், அது பரிசுத்தமானது. பின்பு நசரேயன் திராட்சரசம் குடிக்கலாம்."

நிறுத்தப்படும் வரைக்கும் காட்டப்படும் அசைவாட்டும் பலி, நம்முடைய மரணம் வரைக்கும் தொடர்ந்து செல்லக்கூடிய அர்ப்பணிக்கப்பட்ட

விளக்கவுரையின் நிலைகள்

# மூன்று பாடங்கள்



George Kuzmin

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2 தீமோ. 2:15).

எண்ணாகமம் புத்தகத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு, போதக பள்ளியில் பயன்படுத்தின ஒரு முறையை இங்கு நாமும் பயன்படுத்த விரும்புகிறோம். அவர்கள் நான்கு நிலைகளில் வசனங்களுக்கு விளக்கவுரை அளிக்கிறார்கள். ஒவ்வொரு நிலையும் ஆழமானதும், ஒன்றைக்காட்டிலும் மற்றது வலுவானதாகவும் உள்ளது - ஒரு பெரிய வெங்காயத்தின் அடுக்குகளைப் போலுள்ளது.

**(1) பேஷாட் (Pashat)** - இது, வேத பகுதியின் எளிதானதும், மேலோட்டமான அர்த்தமுமாகும். பொதுவாக வார்த்தைகளில் அர்த்தங்களைப் பயன்படுத்தி இயல்பான நிலையில் இதை புரிந்துகொள்ளலாம். இவைகளை முதலில் கேட்ட இஸ்ரயேலின் பிள்ளைகளுக்கு இதுவே பொருள்பட்டது. "எந்த பகுதியும் தன்னுடைய பேஷாட்டை இழப்பதில்லை. ஒரு பகுதியின் நேரடியான அர்த்தத்தை திருடி செல்லும் எந்த விளக்கவுரையும் தவறானது. ஒருவேளை நாம் அந்த பேஷாட்டை இழப்போமேயானால், அந்த பகுதியின் துல்லியமான புரிந்துகொள்ளுதலை உண்மையாக இழக்க நேரிடும்" (b. Shab. 63a, b. Yeb. 24a) தால்மட் (Talmud) கூறுகிறது. மேலோட்டமான பொருளை நாம் விட்டுவிட்டால், கற்பனை செய்துகொள்ள வேண்டியவர்களாய் தான் இருப்போம்.

**(2) ரெமெஸ் (Remez)** - இது, அந்த பகுதியின் செயல்முறை விளக்கத்தைக் குறிப்பிடுகின்றது. இதற்கான ஒரு எடுத்துக்காட்டை நீதி. 20:10-ல் வாசிக்கலாம். வியாபாரிகள் தங்களிடம் வரும் வாடிக்கையாளர்களிடம் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்று மேற்கூறப்பட்ட வசனத்தின் மேலோட்டமான அர்த்தமாகும். அதேநேரத்தில் நம்முடைய வாழ்கையின் எல்லா கோணங்களிலும் நேர்மையாக இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை ரெமெஸ் கூறுகிறது.

**(3) டிராஷ் (Drash)** - இது, கொடுக்கப்பட்டுள்ள பகுதியின் உவமானமான அர்த்தத்தைக் கொடுக்கும். படைப்பைப் பயன் படுத்தி கொடுக்கப்பட்டுள்ள பகுதிக்கு உள்ளே மீதியுள்ள வசனப்பகுதியின் தொடர்பைத் தேடி கண்டுபிடிக்க வேண்டும். இதற்கான ஒரு எடுத்துக்காட்டை எபி. 10:1-ல் காணலாம். இதில் நியாயப்பிரமாணம் வரக்கூடிய நன்மையான காரியங்களின் நிழலாய் இருக்கிறது என்று கூறப்படுகிறது.

**(4) சாட் (Sod)** - இதற்கு மறைக்கப்பட்டது அல்லது முத்திரிக்கப்பட்டுள்ளது என்று பொருள். ஒரு பகுதியின் பொருள் இரகசியமாக வைக்கப்படுகிறது. இதற்கான ஒரு எடுத்துக்காட்டு, 1 கொரி. 2:7, 14-ல் சம்பாஷிக்கப்படுகிறது .

"உலகத்தோற்றத்திற்குமுன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம். ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்."

இந்த ஒவ்வொரு நிலையும் வேதப்படிப்பின் ஒரு முறையான பகுதியாக உள்ளது. ஒவ்வொரு நிலையும் வேதபடிப்பின் மிக விலையேறப்பெற்ற பகுதியாயும் உள்ளது. நான்கு நிலைகளில் தேவனுடைய வசனங்களை நம்மிடம் பேசப்படுவதற்கு அவருடைய ஒவ்வொரு வார்த்தைகளும் மிகுந்த ஐசுவரியமுடையதாய் இருக்கிறது.

பிராங்க் ஷல்லியு (Bro. Frank Shallieu) எண்ணாகமத்துக்குரிய படிப்பின் ஒழுங்குகளைக் குறித்து விமர்சிக்கிறார் (Bible Student Library, Commentaries, Books, Numbers, Chapter Two, Page 7).

**மூன்று பாடங்கள்**

என்னுடைய வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ள மூன்று பாடங்களை எண்ணாகமம் புத்தகத்தில் நான் கண்டறிந்தேன். முதல் இரண்டு பாடங்கள் மோசேயின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டிருக்கிறது.

**(1) பழி சுமத்துவதின் மூலம் பாடுபடுதல்**, எண். 12:3, "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்." இக்குணத்தை உடையவர்களிடம் தேவன் மிகுந்த மதிப்பைக் கொண்டிருக்கிறார். கிறிஸ்து இருதயத்தில் சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளவர் என்று விவரிக்கப்படுகிறது. ஆனால், கிறிஸ்துவை போல் மோசேயும், ஆரோன் மற்றும் மிரியாமினால் பொறாமை கொள்ளப்பட்டு குற்றம் சாட்டப்பட்டார். இதினிமித்தம் தேவனுடைய கோபம் அவர்களுக்கு எதிராக மூண்டு, மிரியாமை குஷ்டரோகத்தினால் அடித்தார். இதினிமித்தம் மோசே தன்னுடைய சகோதரியின் சுகத்திற்கு தேவனிடத்தில் ஜெபித்தார். "ஏனெனில், தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால், அதுவே பிரீதியாயிருக்கும்" (1 பேது. 2:19).

**(2) இரக்கத்தை நேசித்தல்,** எண். 14:11-19, மோசே இரக்கத்தை சிநேகிப்பவர் என்று இப்பகுதி நமக்கு குறிப்பிடுகின்றது. தேவனுடைய கோபம் இஸ்ரயேல் ஜனங்களுக்கு எதிராக மூண்டது. முழு தேசத்தையும் அழித்து, மோசேயை கொண்டு ஒரு புதிய தேசத்தை உருவாக்கும்படி தேவன் திட்டமிட்டார். ஆனால், மோசே தேவனிடத்தில் இஸ்ரயேலர்களை மன்னிக்கப்படும்படி மன்றாடி, அந்த தேசத்தை இரட்சித்தார். மோசேயின் இரக்கம் மற்றும் அவருடைய சாந்தத்தினிமித்தம் அவர் புகழ் பெற்றார்.

**(3) தேவன் மேல் கொண்டிருக்கும் நம்பிக்கை,** எண். 13:33 துர்செய்தியைப் பரப்பின வேவுகாரர்கள், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் குடியிருந்தவர்களை இராட்சதர்களைப் போலவும், தங்களை வெட்டுக்கிளிகளைப் போலவும் விவரித்தார்கள். இப்படிப்பட்ட யோசனையை எதிராளியான சாத்தான் நமக்குள் ஏற்படுத்தி நம்மை அடிக்கடி தாக்குகிறான் அல்லவா? இப்படிப்பட்ட கண்ணிகளை தவிர்க்க, நம்முடைய தந்தை எப்படிப்பட்டவர் என்பதை எப்பொழுதும் நினைவில்கொள்ள வேண்டும். அவருடைய வல்லமையையும், அவருடைய அன்பையும் எப்பொழுதும் நினைவில்கொள்ள வேண்டும். அதற்குப் பின் தூய்மையான நம்பிக்கையோடு முன் செல்ல வேண்டும்.

இந்த இரண்டு வெள்ளி பூரிகைகளும் அப்போஸ்தலர்களின் எழுத்துக்களின் வழியாக நிறைவு செய்யப்பட்டது. மேலும், டொமிட்டியன் (Domitian) (ரோம சக்கரவர்த்தி கிபி 81-96) ஆட்சி காலத்தில் பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்ட, வயது சென்ற அப்போஸ்தலனாகிய யோவான் கண்ட வெளிப்படுத்தின காட்சியை நிறைவாக எழுதி முடித்தார். இப்படியாக, சபையின் முதலாம் பகுதியில் வேதாகமம் முழுமையாக எழுதப்பட்டது. இரண்டாவது பூரிகையான புதிய ஏற்பாடு, ஐந்து வரலாற்று புத்தகங்களையும் (நான்கு சுவிசேஷங்கள் மற்றும் அப்போஸ்தலர் நடபடிகை), தொடர்ந்து பவுல் எழுதின 14 நிருபங்களும், பேதுரு, யாக்கோபு, யூதா மற்றும் யோவான் எழுதின நிருபங்களும் மற்றும் வெளிப்படுத்தின விசேஷத்தையும் கொண்டுள்ளது.

**மன்னாவைக் குறித்த முறுமுறுப்பு**

இஸ்ரயேலர்கள் மன்னாவைக்குறித்து முறுமுறுத்த காரியங்களும், அதினால் அவர்கள் சந்தித்த விளைவுகளையும் எண்ணாகமம் 11-ம் அதிகாரத்தில் அதிகமாகக் காணலாம், பரலோகத்திலிருந்து பொழியப்பட்ட மன்னா இஸ்ரயேல் ஜனங்களை ஜீவனோடு காப்பதற்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் முதலில் அவைகளைப் பெற்றுக் கொண்டபோது, அவர்கள் மிகவும் சந்தோஷம் அடைந்தார்கள். தேனிட்ட பணியாரம்போல ருசியுள்ள அந்த மன்னாவை அவர்கள் விரும்பி புசித்தார்கள் (யாத். 16:31). மற்ற சூழ்நிலைகளில் இந்த இரண்டு அடையாளங்களும், பரம அழைப்பிற்கான மாபெரும் சிறப்புரிமையோடு தொடர்புடையதாக இருக்கிறது. [புளிப்பில்லா அப்பம், அதிரசம் மற்றும் அடை ஆசாரியர்களின் பிரதிஷ்டையின் போது, பலி செலுத்தப்பட்ட ஆட்டுக்கடாவோடு அசைவாட்டப்பட்டது (லேவி. 8:26-28). சகோதரர்கள் பொதுவாக இந்நிலைகளை நீதிமானாக்கப்பட்ட நிலைமைக்கும், சுத்திகரிக்கப்படுவதற்கும், மகிமையைப் பெறக்கூடிய நிலைமைக்கும் ஒப்பிடுவார்கள். இப்படியாக, திரைக்கு அப்பால் பெறக்கூடிய மகிமையைப் பெறுவதற்கான மகிழ்ச்சியோடுகூட இந்த அடைகள் ஒப்பிடப்படுகிறது. சிம்சோன் கூறிய விடுகதையில் தேன் பயன்படுத்தப்பட்டுள்ளது. "பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணமும், பலவானிடத்திலிருந்து மதுரமும் வந்தது" (நியா. 14:14). மரித்த சிங்கத்திலிருந்து அளவில்லாத தேன் வந்தது என்று குறிப்பிடப்படுகின்றது. இனிமையானதும், அழிவில்லாததுமான பரம அழைப்பை இந்த தேன் அடையாளப்படுத்துகிறது. இது யூதா கோத்திரத்து பாலசிங்கமாகிய இயேசுவின் மரணத்தினால் கிடைக்கப்பெற்ற மதுரமான பரம அழைப்பாகும் (வெளி. 5:5).]

வனாந்தர பிரயாணத்தில் இஸ்ரயேல் ஜனங்கள் ஆரம்பத்தில் மிக மகிழ்ச்சியாக இருந்தார்கள். ஆனால், காலப்போக்கில் அது பழமையாகும்போது, அதினிமித்தம் முறுமுறுப்பு ஏற்பட்டது. அதுபோல, "தேவனுக்குள் இயேசு கிறிஸ்துவினால் நாம் பெற்ற பரம அழைப்புக்காக" (பிலி. 3:14), மகிமையான நம்பிக்கைகள்கூட காலப்போக்கில் முறுமுறுக்கப்படலாம். ஏனெனில், மனுப்புத்திரருக்கு தேவன் அருளின மிக அற்புதமான சிலாக்கியம் இதுவே. கிறிஸ்தவ வாழ்க்கை பொதுவாக இயல்புக்கு மாறாக வாழக்கூடிய சராசரி வாழ்வாகும் - பல பிரச்சனைக்குரிய அனுபவங்களின் மத்தியில் கிறிஸ்தவ கோட்பாடுகளின் வழியாக நடத்தப்படும் ஒரு வாழ்க்கையாகும். இயேசு தம்முடைய 30-ம் வயதில் ஊழியத்தை துவங்கு வதற்கு முன், சந்தேகத்திற்கு இடமின்றி, ஒரு சராசரி வாழ்கை வாழ்ந்திருக்க வேண்டும். அவர் எல்லா பொறுப்புகளையும் உடையவராக, ஜீவனுக்குரிய வேலைகளைச் செய்து, தன்னுடைய தாயையும் தனக்குப் பின் பிறந்த சகோதர சகோதரிகளையும் பராமரித்து வாரந்தோறும் தேவனை தொழுது கொள்ளுவதற்கு ஆலயத்திற்குச் சென்றார். இப்படியாக பல கிறிஸ்தவர்கள் இந்நாள்வரைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆயினும், வாழ்கையின் இந்த இயல்பான அனுபவங்கள், மாபெரும் வாய்ப்புகளைப் பெறுவதற்கு பொறுமையையும், பொறுப்புகளையும் உணரக்கூடிய மனநிலையையும், விசுவாசத்தையும், கடமை களையும் நேர்மையாகவும், நியாயமாகவும், உழைப்ப தற்கும், குடும்பத்தை பராமரிப்பதற்கும் அன்றாட வாழ்கையில் பல்வேறு காரியங்களை நிகழ்த்து வதற்கும் வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது. இக்குணங்களோடு கிறிஸ்துவின் கிருபை, இரக்கத்தின் ஆவியும், நேர்மை மற்றும் உண்மை வெளிப் படுவதே கிறிஸ்தவ கோட்பாடுகளையும், குணலட்சணங் களையும் வெளிப்படுத்துவதற்கான சிறந்த வழிகளாகும்.

நம்முடைய விசுவாசத்தை அப்பியாசப் படுத்தும்போதும்கூட சோர்வுகள் ஏற்படலாம். அன்று இஸ்ரயேலர்களினிமித்தம் பெற்ற மன்னாவைக் குறித்து சோர்வடைந்ததுபோல, நாமும் சோர்வ டைந்து விடுகிறோமா?

"அவர்களுக்குள் இருந்த பலஜாதியான அந்நிய ஜனங்களே" உண்மையில் இந்த முறுமுறுப்பைத் துவங்கினார்கள் (எண். 11:4). இப்படியாகவே, தேவனிடத்தில் தங்களை

இஸ்ரயேலர்கள் இவர்களின் ஆலோசனைகளைப் புறக்கணித்து தொடர்ந்து செல்ல மறுத்தார்கள். அதின் விளைவாக இஸ்ரயேலர்கள் 40 வருடங்கள் வனாந்தரத்தில் சுற்றித் திரிய வேண்டும் என்று தேவன் தீர்ப்பளித்தார். (உபா. 1:3 மற்றும் 33:38, மோசே 40 வருடத்தின் முடிவில் இஸ்ரயேலர்களிடமிருந்து விடை பெற்றார். இவர்கள் பயணித்த நாள் துவங்கினதிலிருந்து "ஒரு" வருடம் அதில் சேர்க்கப்பட்டது.) இப்படியாக, தேவன் அவர்களுக்காக நியமித்திருந்த சுதந்தரம், இஸ்ரயேல் சந்ததியிடமிருந்து பறிக்கப்பட்டது. மேலும், அந்த சுதந்தரத்தை அவர்களின் பிள்ளைகள் பெற்றார்கள்.

அதுபோல, சபையின் வரலாற்றில் இது ஒரு இருட்டான பகுதியாகக் காணப்படுகிறது. தியத்தீராவின் சபை காலத்தில் சபையானது, பரலோக நோக்கங்களிலிருந்தும், ஆவிக்குரிய நம்பிக்கைகளிலிருந்தும், திசைத்திருப்பி தங்களுடைய எதிராளிகளை மேற்கொள்ளுவதற்கு விசுவாசத்தில் நல்ல போராட்டத்தைப் போராடுவதற்கு மறுத்தார்கள். அதற்குப்பதிலாக பூமிக்குரிய ஆளுநர்களோடு இணைந்து செயல்படுவதற்கான சோதனைக்கு உட்பட்டு அதற்கேற்ற தகுதியான நிலையைப் பெற விரும்பினார்கள் - இப்படி செய்ததினால் அவர்கள் ஆவிக்குரிய வாழ்கையையும், விசுவாசத்தின் ஓட்டத்தையும் முற்றிலுமாக கைவிட்டனர். ஆம், ஆயிரம் வருஷம் அரசாட்சியில் இவர்கள் அனைவரும் மீண்டும் ஒரு வாய்ப்பைப் பெறுவார்கள். ஆயினும், தேவனுடைய மகிமைக்கென்று கனி கொடுப்பதற்காக, தங்களுடைய இருதயத்தில் கிறிஸ்துவின் குணலட்சணங்களைப் பொறுமையோடு வளர்ச்சியடையச் செய்யும் பரிசுத்தவான்கள் பெறக்கூடிய பரலோக ஆசீர்வாதத்திற்கான பிரதான வாய்ப்பை இழந்துவிட்டார்கள்.

உண்மையில் துர்செய்தியைப் பரப்பின அந்த 10 வேவுகாரர்கள், வெளிப்படுத்தின விசேஷத்தில் இருண்ட யுகத்தின்போது, பெயரளவிலான கிறிஸ்தவ மண்டலத்திற்கு ஆதரவு அளித்த அமைப்புகளின் எண்ணாகிய 10 என்பதை நினைப்பூட்டுகிறது. வெளிப்படுத்தல் 17-ம் அதிகாரத்தில் பெயர் சபையை அடையாளப்படுத்தும் அந்த வேசி (பரலோக மணவாளனுக்கு அவ்விசுவாசமாய் செயல்படுவோர்) பயணித்த மிருகத்திற்கு 10 கொம்புகள் இருந்தன. வெளி. 13-ம் அதிகாரத்தில் ஒரு மிருகத்திற்கு ஒப்பிடும் போப் அமைப்பிற்கு 10 கொம்புகள் இருந்தன. தானியேல் இரண்டாம் அதிகாரத்தில் பெயர் கிறிஸ்தவ மண்டலத்திற்கு 10 விரல்கள் இருந்தன. அந்த விரல்கள் இரும்பும் (அரசியல் வல்லமை), களிமண்ணோடு (மத வல்லமை) கலந்திருந்தது.

**விறகு பொறுக்குதல்**

எண்ணாகமம் 15-ம் அதிகாரம் தகனபலிகளுக்கு சம்பந்தப்பட்ட சில ஒழுங்குகளைக்குறித்து பேசுகிறது. லேவியராகமத்தின் துவக்க அதிகாரங்களில் ஐந்துவிதமான தகனபலிகள் குறிப்பிடப்படுகின்றது - தகனபலிகள், போஜனபலிகள், பாவநிவாரண பலிகள், சமாதானபலிகள் மற்றும் குற்றநிவாரண பலிகள். ஆலயத்தில் நித்தமும் அந்திசந்தி நேரங்களில் ஆட்டுக்குட்டிகள் தகனபலிகளாக செலுத்தப்பட்டது. பல நூற்றாண்டுகளுக்குப் பின் செலுத்தப்படக்கூடிய இயேசுவின் ஈடுபலியை இவைகள் அடையாளப் படுத்துகிறது.

இந்த தகனபலிகள் இயேசுவின் ஈடுபலியோடு தொடர்புடையதாய் இருக்கிறது. மேலும், லேவியராகமத்தில் குறிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ள சில தகனபலிகளில் இவைகளின் தொடர்பு மிக ஆழமாகக் காட்டப்படுகிறது. எடுத்துக்காட்டாக, செலுத்த வேண்டிய பலிபொருள் நேரடியாக விறகுகளின் மேல் போடப்பட வேண்டும் என்று லேவி. 1:7-8-ல் கூறுகிறது. அதேநேரத்தில், மற்ற பலிகள் தகனிக்கப்படும் பலிகளுக்குமேல் போடப்பட வேண்டும் என்று லேவி. 3:5-ல் குறிப்பிடுகிறது. செலுத்தப்படும் பலி சிலுவை மரத்தின் மேல் வைக்கப்படுவதை அடையாளப்படுத்தும். ஏனெனில், நம்முடைய இரட்சிப்புக்கான ஈடு கிரயத்தை, சிலுவை மரத்தின் மேல் நம்முடைய ஆண்டவராம் இயேசு தம்முடைய ஜீவனைக் கொடுத்து செலுத்தினார். மேலும், நம்முடைய ஆண்டவராம் இயேசு, சிலுவையில் அறையப்படுவதற்கு கல்வாரியின்மேல் அந்த சிலுவையைச் சுமந்து கொண்டுபோனதற்கு அடையாளமாக, மோரியா மலையின்மேல் ஈசாக்கு, பலிக்குண்டான கட்டைகளைச் சுமந்து சென்றார் (ஆதி. 22:6; யோவா. 19:15).

சீர்திருத்தலின் காலத்தின்போது, இயேசுவின் மரணத்தின் வழியாகக் கிடைக்கப்பெற்ற இரட்சிப்பை, விசுவாசிப்பதின் மூலம் நீதிமானாக்கப்படுகிறோம் என்ற அஸ்திபாரமான போதனையை போதிப்பதே மார்டீன் லுத்தரின் இடைவிடாத வேலையாக இருந்தது. அறுவடையின்போது, சத்தியத்திற்கு முதுகெலும்பாக இருக்கக்கூடிய ஈடுபலியின் உபதேசம், மீண்டும் வெளிச்சத்திற்கு வருவதற்கான ஒரு துவக்கமாக இருந்தது. மார்டீன் லுத்தர் இவைகளை துவக்கினாலும் (சீர்திருத்தம்) பாஸ்டர் ரசல் மேலும், அவைகளை தெளிவாக விவரிக்கக்கூடிய

வேலைகளை தொடர்ந்து நடத்தினார். அவர் ஈடுபலியின் தத்துவத்தையும், அதற்கு சம்பந்தப்பட்டிருக்கும் தேவனுடைய யுகங்களுக்கான திட்டத்தையும் தெளிவாக விளக்கினார். (மார்டீன் லூத்தர் துவக்கின சீர்திருத்தம் (1517 oct. 31), அவர் முன் வைத்த 95 குற்றச்சாட்டுகளுக்கு அனைவருடைய கவனத்தையும் திருப்பியது. அதேநாளில், 399 வருடங்களுக்குப் பின், 1916 Oct. 31 அன்று, சகோதரர் ரஸல் அவர்களின் பணி முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.)

ஒரு இஸ்ரயேலன் ஓய்வு நாளின்போது, விறகுகளைப் பொறுக்கினதைக் குறித்து எண். 15:32-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்காரியம் மோசேயினிடத்தில் கொண்டுவரப்பட்டது. மோசே தேவனிடத்தில் விசாரித்தப்போது, இந்த பாவ செயலுக்காக அவன் மரிக்க வேண்டும் என்று தேவன் தீர்ப்பளித்தார். விறகுகள் என்றும் மரமாகாது. ஆனால், தேவன் நம்முடைய பாவத்தை போக்குவதற்கு சிலுவை மரத்தின்மேல் இயேசுவின் ஈடுபலியை ஏற்படுத்தினார். ஆனால், சிலர் அவ்வழியைப் பயன்படுத்தி மீட்பைப் பெறுவதற்குப்பதிலாக, கீழே உள்ள விறகுகளைப் பொறுக்குவதற்கு ஒப்பாக, வேறு வழியை தேடுபவர்கள் அவர்களின் கிரியைகளினி மித்தம் தேவனால் தண்டிக்கப்படுவார்கள். [பவுல் நெருப்பை மூட்டுவதற்கு சில விறகுகளைப் பொறுக்கினார் (அப். 28:3). இந்த அதிகாரம் ஆயிரம் வருஷம் அரசாட்சியின் துவக்க நிலையை அடையாளப்படுத்துகிறது. மேலும், அவர் சென்றிருந்த அந்த தீவு இராஜ்யத்தின் துவக்கநிலை இஸ்ரயேல் தேசத்தை அடையாளப்படுத்துகிறது. அங்கு சென்றிருந்த பவுல், தேவனுடைய பேச்சாளர்களாகிய முற்பிதாக்களை அடையாளப்படுத்துகிறார். மேலும், இஸ்ரயேலின் பல கிரியைகளையும் நம்பி வந்த பாரம்பரிய கொள்கைகளையும் முற்பிதாக்கள் எவ்வாறு நீக்கிவிடுவார்கள் என்பதை, பவுல் அந்த விறகுகளை அக்கினியில் போட்டதை அடையாளப்படுத்துகிறது - அப்பொழுது முழு தேசமும் தேவனையே சார்ந்து அவருக்கு முன் நிற்பார்கள்]. எடுத்துக்காட்டாக, பாவமன்னிப்பு சீட்டைப் பெறுதல், தியானம் செய்தல், பாவ அறிக்கை செய்தல், ஜெபமாலை, விக்கிரக ஆராதனை அல்லது புனிதர்களின் ஆராதனையும் இதில் அடங்கும். மேற்கூறப்பட்ட எந்த காரியமும் சாபத்திலிருந்து விடுதலை தராது. கிறிஸ்துவின் ஒப்புரவாக்குதலின் வேலைகளின்மேல் விசுவாசம் வைத்தால் மட்டுமே நாம் விடுதலைப் பெறமுடியும்.

எபிரெயர் நான்காம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல், செத்த கிரியைகளிலிருந்து நாம் ஓய்வு பெற்று கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் என்று அடையாளமாகக் கூறுகிறார். எண். 15:32-ல், விறகு பொறுக்கின அந்த மனுஷன் ஓய்வு நாளின் பரிசுத்தத்தை மதிக்கவில்லை. தேவனுடைய இராஜ்யத்தில் கிறிஸ்துவின் கிரியைகளை விசுவாசித்து இரட்சிப்பு அடைவதற்கு பதிலாக தனித்து இரட்சிப்பைப் பெறுவதற்கு வழியை தேடுகிறவர்கள் அந்த மனுஷனை அடையாளப் படுத்தக் கூடும் - அந்த மனுஷன் ஜீவனைத் தொலைத்ததுபோல, கிறிஸ்துவின் ஈடுபலியைப் புறக்கணிக்கக்கூடிய யாவரும் ஆவிக்குரிய ஜீவனை இழப்பார்கள்.

**கோராகின் கலகம்**

அடுத்து வந்த தீர்க்கதரிசனமான ஒரு மைல் கல், ஆறாம் சபையின் காலத்தில் வந்த பிரென்சு புரட்சி ஆகும். இந்த புரட்சியின்போது, போப் அமைப்பு மிகவும் தாழ்த்தப்பட்டு, பரிசுத்தவான்களுக்கு எதிராக நடப்பித்த குற்றங்களினிமித்தமாகவும், தாங்களே கிறிஸ்துவையும், தேவனையும் அடையாளப்படுத்தும் பிரதிநிதிகள் என்று கோரி கொண்டதினாலும், அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பெற்றார்கள். இவர்களின் வழியாகவே ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டும் என்றும், அவர்களின் சபை மற்றும் ஆசாரியர்களின் வழியாகவே (போப் அமைப்பு) தேவனிடத்தில் சேர முடியும் என்றும் கோரினார்கள்.

இப்படிப்பட்ட குறிப்பான போராட்டத்தின் ஆவி கோராகிடத்தில் காணப்பட்டது. மிரியாம் பாவம் செய்தபோதிலும், எந்தவிதமான தேர்வுமின்றி தேவன் மோசேயை தம்முடைய தீர்க்கதரிசியாக நியமித்திருந்தார் (எண். 12:5-8). மேலும், ஆரோனும் அவருடைய குமாரர்களும் இஸ்ரயேலின் ஆசாரியர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் தெளிவாகக் குறிப்பிட்டார் (லேவி. 8:2). மற்றும் அவர்களுக்கு உதவியாளர்களாக மற்ற லேவியர்கள் நியமிக்கப்பட்டார்கள் (எண். 8:13). தேவனுடைய தேர்வு இவ்வளவு தெளிவாக வெளிப்பட்டபோதிலும், தேவனால் தேர்வு செய்யப்பட்டவர்களின் மகிமைக்கு சரியான மகிமை பெறுவதற்கு கோராகு முயற்சித்தான்.

கோரா - "லேவிக்குப் பிறந்த கோகாத்தின் குமாரனாகிய இத்சேயாரின் மகன் கோராகு" (எண். 16:1). இத்சேயார் அம்ராமின் சகோதரனும், அம்ராம் மோசே மற்றும் ஆரோனின் தந்தையுமானார். இப்படியாக, கோராகு, கோகாத்தின் வம்சவளி வந்த மோசேயின் இனம் ஆனார். (லேவிக்கு, கெர்சோன் மற்றும் மெராரி என்ற மற்ற இரண்டு குமாரர்களும் இருந்தார்கள்) ஒருவேளை குடும்பத்திற்குள் இருந்த இந்த நெருக்கமானது, இஸ்ரயேலின் தலைமையைப்

பற்றிக்கொள்வதற்கு கோராகை ஊக்குவித்திருக்க வேண்டும். மேலும், கோராகு தன் பக்கத்திலிருக்கும் நியாயத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, தன்னோடு கூட 250 பேரை சேர்த்துக் கொண்டான். "இஸ்ரவேல் புத்திரரில் சபைக்குத் தலைவர்களும் சங்கத்துக்கு அழைக்கப்பட்டவர்களும் பிரபலமானவர்களுமாகிய இருநூற்று ஐம்பது பேர்களோடும் கூட மோசேக்கு முன்பாக எழும்பி" (எண். 16:2). இது ஒரு சிறிய காரியமல்ல.

அதுபோல, பெயர் கிறிஸ்தவ மண்டலத்தின் பிரபலமான முக்கியஸ்தர்கள் ஆவியினால் வழிநடத்தப்பட்ட தேவ ஜனங்களை மேற்கொண்டனர். இவர்கள் பெற்றிருந்த அதிகாரம், கோரா பெறவிரும்பிய அதிகாரத்திற்கு ஒப்பாய் இருந்தது. இதுவும் சிறிய காரியமல்ல. இந்த புரட்சியானது சொல்ல முடியாத பிரச்சனைகளையும், வேதனைகளையும், அநீதிகளையும் நீதிக்கு எதிராகப் போர் தொடுத்தது.

கோராகின் புரட்சியை ஒரு வல்லமையான பூமி அதிர்ச்சியோடு தேவன் முடிவுக்குக் கொண்டுவந்தார். குற்றவாளிகளின் கூட்டத்தை பூமி பிளந்து விழுங்கியது. ஆயினும், புரட்சியின் ஆவி முழுமையாக நிறுத்தப்படவில்லை. ஏனெனில், மோசே மற்றும் ஆரோனுக்கு விரோதமாக தொடர்ந்து குற்றங்கள் சாட்டப்பட்டது. ஆயினும், புரட்சி ஓரளவுக்கு நிறுத்தப்பட்டது. அதுபோல, பிரஞ்சு புரட்சியின்போது, இந்த போப் அமைப்பின் வல்லமைகள் முழுமையாக நிறுத்தப்படாமல் போனாலும், அவைகள் ஓரளவுக்கு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. பரலோகத்தின் நட்சத்திரங்கள் விழும்படியாக மிகப்பெரிய பூமியதிர்ச்சி ஏற்பட்டதென்று இவைகளைக்குறித்து (வெளி. 6:12)-ல் வாசிக்கிறோம். மேலும், வானம் ஒரு புஸ்தகச் சுருளைப்போல சுருட்டப்பட்டதென்றும் வாசிக்கிறோம் (வெளி. 6:13-14).

### ஆரோனின் துளிர்த்தக்கோல்

ஆசாரியத்துவத்தில் அதிகாரத்தைப் பெறுவதற்கு, தேவன் நியமித்த கோத்திரத்தைத் தெளிவாக வெளிப்படுத்தும்படியாக இஸ்ரயேலில் ஒவ்வொரு கோத்திரத்தாரும் ஒரு கோலை எடுத்துவரும்படி எண்ணாகமம் 17ம் அதிகாரத்தில் தேவன் கட்டளையிட்டார். "நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்கள் பிதாக்களின் வம்சங்களாகிய ஒவ்வொரு வம்சத்தினுடைய பிரபுவினிடத்தில், ஒவ்வொரு கோலாகப் பன்னிரண்டு கோலை வாங்கி, அவனவன் கோலில் அவனவன் பேரை எழுதுவாயாக. லேவியினுடைய கோலின்மேல் ஆரோனின் பேரை எழுதக்கடவாய்; அவர்களுடைய பிதாக்களின் ஒவ்வொரு வம்சத் தலைவனுக்காகவும் ஒவ்வொரு கோல் இருக்கவேண்டும். அவைகளை ஆசரிப்புக் கூடாரத்திலே நான் உங்களைச் சந்திக்கும் ஸ்தானமாகிய சாட்சிப்பெட்டிக்கு முன்னே வைக்கக்கடவாய். அப்பொழுது நான் தெரிந்துகொள்ளுகிறவனுடைய கோல் துளிர்க்கும்; இப்படி இஸ்ரவேல் புத்திரர் உங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிற அவர்கள் முறுமுறுப்பை என்னைவிட்டு ஒழியப்பண்ணுவேன் என்றார்" (எண். 17:2-5). ஆம், ஆரோனின் கோல் துளிர்த்தது.

மிகப்பெரிய காரியங்களை அடையாளப் படுத்தும்படியாக இந்த நிகழ்வு ஏழாம் கால சபைக்குப் பொருந்துகிறது. ஏனெனில், இக்காலத்தில் சபை மகிமையில் துளிர்க்கக் கூடியதாய் இருக்கிறது. இக்காரியம் முழுமை பெறும்போது தேர்வு செய்யப்பட்ட சபை வகுப்பினர் கிறிஸ்துவின் மணவாட்டி, இந்த உலகத்தை தேவனோடு மீண்டும் ஒப்புரவாக்குவதற்கு அவரால் தேர்ந்து கொள்ளப்பட்ட ஆசாரியர்கள் இவர்களே என்பதை இந்த உலகத்திற்கு பகிரங்கமாக வெளிப்படுத்தப்படும். ஆகவே, "இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்" என்று (வெளி. 20:6)-ல் வாசிக்கிறோம்.

ஆரோன், வாதுமை கோலை பயன்படுத்தினார். "அது துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப் பழங்களைக் கொடுத்தது" (எண். 17:8). வாதுமைமரம் காலத்திற்கு முன்னதாகவே பூக்கக்கூடிய தன்மையுடையது. ஷேக்குவட் (shaqad) என்ற எபிரெய வார்த்தை, வாதுமை என்று மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. (Strong's number 8247, shaqad) இந்த வார்த்தை ஷேக்குவட் (shaqad) என்ற வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இப்படியாக, (எரே. 1:11-12)-ல், "என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன்" என்பதற்கு அடையாளமாக வாசிக்கிறோம். அதாவது, மனுக்குலத்தின் உயிர்த்தெழுதலுக்கு முன்னதாகவே, சபை வகுப்பார் முதலில் உயிர்த்தெழுவர் என்பதை இக்காரியம் வலியுறுத்துகிறது. இப்படியாக, வாதுமை மரம் தெரிந்துகொள்ளப்பட்ட சபைக்கு பொறுத்தமான அடையாளமாய் இருக்கிறது. அதற்குப் பின் அவர்களின் வழியாக உலக மனுக்குலம் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

**தொடங்குவது என்ன?**

சுவிசேஷம் முழுவதிலும் கடந்து வந்த ஏழு சபைகளில் நடக்கக்கூடிய, ஏழு வரிசையான சம்பவங்களைக் கண்டோம். இதைத் தொடர்ந்து, எண். 18-ம் அதிகாரத்தில், தொடரக்கூடிய காரியம் என்னவாக இருக்கும்! இது ஆயிரம் வருஷம் துவக்கத்திலிருந்து சபை முழுமை பெறும் காலம்வரை உள்ள சம்பவங்களைக் குறிப்பிடுகிறது.

**அதிகாரம் 18** - தேவனுடைய ஆசாரியத் துவத்தில் ஆரோன் மற்றும் அவருடைய குமாரர்களும், இஸ்ரயேலரிடத்திலிருந்து பெறக்கூடிய பல்வேறு பலிகள் இந்த அதிகாரத்தில் வரிசைப் படுத்தப் பட்டுள்ளது. இக்காரியம், இந்த உலகத்தை தேவனோடு ஒப்புரவாக்கும் மகிமையடைந்த சபை பெறக்கூடிய காணிக்கைகளை அடையாளப் படுத்துகிறது.

**அதிகாரம் 19** - இஸ்ரயேலர்களை பாவத்தி லிருந்து சுத்திகரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட சிவப்பு கிடாரியின் சாம்பலைக்குறித்து இந்த அதிகாரத்தில் வாசிக்கிறோம். இந்த சிவப்பு கிடாரியின் சாம்பல் பெரும்பாலும் இந்த உலகம் தங்களுடைய பாவத்திலிருந்து சுத்திகரிப்பதற்கு உதவியாயிருக்கும். பழைய ஏற்பாட்டின் நீதிமான்கள் பெற்ற வாழ்கையின் அனுபவங்களை அடையாளப் படுத்துகிறதாக சகோதரர்கள் கருதுகிறார்கள். (எபி. 9:13)-ல், அப்போஸ்தலனாகிய பவுல், சிவப்பு கிடாரியை பழைய ஏற்பாட்டு நீதிமான்களின் பலிகளுக்கு ஒப்பிடுவதில்லை. பழைய ஏற்பாட்டின் எல்லா விவரங்களும் குறிப்பான நிழலை அடையாளம் காட்டவேண்டிய அவசியம் இல்லை என்பதற்கான, பவுலின் விமர்சனங்களுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்று எண்ணுகிறோம். (சாம்பல் - பலிகள் செலுத்தப்பட்ட பின்பு மீதியிருப்பவைகள்) அடையாளமாக சபை முழுமையடைந்தவுடன் ஆயிரம் வருஷம் ஆட்சியின் வேலைகளை துவங்கும்போது பழைய ஏற்பாட்டு நீதிமான்கள் காணப்படுவது எவ்வளவு பொருத்தமாக உள்ளது.

**அதிகாரம் 20** - தேவனுடைய இராஜ்யத் தில், இந்த உலக மனுக்குலம் ஜீவதண்ணீரோடும், நதியை வாஞ்சிப்பதற்கு ஒப்பாக இந்த அதிகாரம் இஸ்ரயேலர் தண்ணீருக்காக வாஞ்சிப்பது ஒப்பிடப்படுகிறது. 7 மற்றும் 8-ம் வசனத்தில், தண்ணீர் கிடைப்பதற்கு, கன்மலையிடம் பேசும்படி தேவன் மோசேயிடம் கூறினார். சில ஆண்டுகளுக்கு முன்பாக, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தேவன் மோசேயிடம் தண்ணீர் பெறும்படி கன்மலையை அடிக்கும்படி சொன்னார் (யாத். 17:6). இன்று, இரண்டு வித்தியாசமான யுகங்களில் பெறக்கூடிய இரட்சிப்புகள் அடையாளமாகக் கூறப்படுகிறது. முதலில் சுவிசேஷ யுகத்தின் போது, நாம் ஜீவ தண்ணீரைப் பெறும்படி இயேசு மரிக்க வேண்டியதாயிருந்தது. ஆயினும், ஆயிரம் வருஷம் அரசாட்சியின் துவக்கத்தில் இந்த உலகத்தை ஆசீர்வதிப்பதற்கு, கன்மலையாம் கிறிஸ்து பேசினால் போதுமானது (வெளி. 22:1).

இதுவரைக்கும், சபை மற்றும் முற்பிதாக்கள் அடையாளமாகக் குறிப்பிடப்பட்டார்கள். ஆனால், மனுக்குலத்தின் சார்பாக தேவனுடைய இராஜ்யத்தில் செயல்படும் முக்கியமான வகுப்பாராகிய திரள் கூட்டத்தாரை நாம் காணவில்லை. நாம் எண்ணாகமம் புஸ்தகத்தைப் புரட்டிப்பார்த்தோமானால், எட்டாம் அதிகாரத்தின் துவக்கத்தில் நாம் அவைகளைக் காணலாம். ஆகவே, அவர்களும் இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார்கள். ஆரோனின் ஊழியம் முடிவடைந்து எலியேசரிடம் ஆசாரியத்துவம் கைமாறின காரியம் எண். 20:25-29-ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு ஒப்பாக, இந்த சுவிசேஷ யுகத்தில், மாம்சத்திலுள்ள சபைக்கான இயேசுவின் ஆசாரியத்துவ ஊழியம் நிறைவடைவதை அடையாளமாகக் காட்டுகிறது. இறுதியாக ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட திரள் கூட்டத்தாரும் திரைக்கு அப்பால் கடந்து செல்வார்கள். இப்படியாக, ஆசாரியர்களின் வேலை ஒரு தலைமுறையிலிருந்து மற்ற தலைமுறைக்குக் கைமாற்றப்பட்டு ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுடைய வேலைகள் நிறைவடைந்து, திரள்கூட்டத்தாரின் வகுப்பாரில் உள்ள இறுதி நபர் கூட தம்முடைய இருப்பிடம் செல்வார். (இதற்கு ஒப்பாக அடைக்கல பட்டணங்கள் அடையாளமாக சொல்லப்படுகிறது. எந்த அடிப்படையான நோக்கமின்றி தவறு செய்யக்கூடிய மனுஷன், அக்காலத்தில் வாழ்ந்த பிரதான ஆசாரியனுடைய மரணம்வரைக்கும் அடைக்கல பட்டணத்தில் தங்கியிருப்பதற்கு ஒப்பாக இந்த சுவிசேஷ யுகம் முழுவதிலும் நம்முடைய பிரதான ஆசாரியனுடைய பணி முடிவு பெறும்வரையில் அவருடைய அடைக்கலத்தில் நாம் இருக்க வேண்டும். அதுபோல, ஆயிரம் வருஷம் அரசாட்சியிலும் இந்த உலக முழுவதும் அவர்களின் பிரதான ஆசாரியரின் ஊழியம் முடிவு பெறும்வரையிலும் அவர்கள் தங்களுடைய அடைக்கல பட்டணத்தில் தங்கியிருக்க வேண்டும்).

# கெட்டிஸ்பர்க் மற்றும் உள்நாட்டு கலவரம்

அமெரிக்காவின் உள்நாட்டு கலவரமாகிய கெட்டிஸ்பர்க்கில் (Gettysburg) யுத்தம் ஜூலை 1, 2013 அன்று 150 ஆண்டுகள் நிறைவுற்றது. இதுவரை அமெரிக்கா கண்டிராத மிகக் கொடூரமான யுத்தம் அது. பென்சில்வேனியா (Pennsylvania) நகரத்தைச் சுற்றி மூன்று நாட்கள் நடந்த இந்த கலவரத்தில் 51,000-கும் மேற்பட்ட ஆண்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது காயமடைந்தார்கள். இந்த யுத்தம் இராணுவத்திற்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. படைவீரர் மிகக் கடினமாகப் போரிட்டப்பின் கெட்டிஸ்பர்க்கில் வெற்றி கண்டதோடு நின்றுவிடாமல், அந்த வெற்றியானது, இன்னும் வேகம் பிடித்து மீண்டும் நான்கு ஆண்டுகள் நடந்த போரிலும் வெற்றியடைந்தனர். இதனால் 6,00,000 படைவீரரை இழந்தனர். இந்த போரினால், வடக்கு நாடுகளைச் சேர்ந்த 20-45 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் மற்றும் தெற்கு பகுதியைச் சேர்ந்த 18-40 வயதிற்கு உட்பட்ட வெள்ளையர்களும் உயிரிழந்ததாக வரலாற்று ஆசிரியர் John Huddleston கணிக்கிறார்.

அப்பாவி மக்களும் இந்த போரில் காயப்பட்டிருப்பதை உணரும்பொழுது இது அமெரிக்காவின் மிகக் கொடூரமான ஒரு யுத்தாய் இருக்கிறது. J. David Hacker என்பவரின் ஆய்வு படி, இந்த போரினால் இராணுவம் மற்றும் பொதுமக்களில் காயப்பட்டவரின் எண்ணிக்கை மொத்தம் 761,000 ஆக கணக்கிடப்பட்டது.

அமெரிக்க வரலாற்றில் இந்த வடக்கு நாடுகளின் வெற்றி, அடிமைதனத்தை அழித்தது ஒரு நினைவுச் சின்னமாக மாறினாலும், சொந்த நாட்டு மக்களையே கொன்ற அந்த துயரமானது இன்றும் பல குடும்பங்களை தாக்கிக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவின் இந்த உள்நாட்டு கலவரத்தைப் பற்றி ஹேரீஸ் என்பவர் மக்களிடையே ஆய்வு செய்கையில் மக்கள் சிலர் அதனை ஆதரித்துப் பேசுவதையும் சிலர் அதை எதிர்த்துப் பேசுவதையும் உணர்ந்தார்.

### உள்நாட்டு கலவரத்தின் காரணம்

ஒரு மனதாய் உள்ள சமுதாயம் ஒரு அமைதியான சமுதாயம் என்பது பலருடைய அனுமானம். கடந்த 150 ஆண்டுகளாக உள்நாட்டு கலவரங்களைக் கண்ட பல நாட்டினர், இந்த அனுமானத்தை ஆதரிக்கின்றனர். ரஷ்யா, அயர்லாந்து, சீனா, வியட்நாம், ஸ்பெயின், கிரீஸ், கொரியா, இந்தோனேஷியா, நைஜீரியா, லெபனான், Mozambique, Nicaragua, El Salvador, யூகோஸ்லேவியா, ஆப்கானிஸ்தான், மற்றும் காங்கோ. மேற்கூறப்பட்ட நாடுகளிலெல்லாம் பலதரப்பட்ட மனிதர்கள் அதாவது, பலதரப்பட்ட வகுப்பினர் அல்லது மதத்தில் வேறுபட்டவராய் வாழ்கின்றனர். ஆனால், James D. Fearon மற்றும் David D. Laitin என்ற உள்நாட்டு கலவரத்தை ஆராய்வதில் வல்லுநர்கள். இவைபோன்ற 129 போர்களை ஆராய்ந்த பின், அதைப்பற்றி தொகுத்து கூறுகையில், "உள்நாட்டு கலவரமானது ஒரே நாட்டில் பல இனத்தைச் சார்ந்தவர்களாலோ அல்லது பல மதங்களைச் சார்ந்தவர்கள் அல்லது பலவிதமான கலாச்சாரங்களைக் கொண்ட மனிதர்கள் ஒரே இடத்தில் வாழ்வதால் மட்டுமல்ல என்று கூறுகிறார்கள்." மேலும், ஆப்பிரிக்காவில் நடக்கும் கலவரமெல்லாம் ஒரு புது வகையாக உள்ளன என்கிறார். University of Wisconsin-ல் இருக்கும் ஆப்பிரிக்கா அரசியல் வல்லுனரான Crawford Young கூறுகிறார். 1989 நடந்த பல உள்நாட்டு கலவரத்திற்குக் காரணம், மதமோ, இனமோ, மொழியோ அல்ல என்று வலியுறுத்துகிறார்.

"Clash of Civilizations and the Remaking of World Order" என்ற நூலை எழுதிய சாமுயேல் P. Huntington இந்த ஒரு எதிர்நோக்கை வன்மையாய் எதிர்க்கிறார். உலகளவில் இஸ்லாமியருக்கும் பிற மதத்தினருக்கும் நடுவில் கலாச்சார வேறுபாடுகளால் கிழிந்து கிடக்கும் உலகைப்பற்றி தம் நூலில் சித்தரிக்கிறார். கலாச்சார வேறுபாட்டால் மட்டும் உள்நாட்டு கலவரங்கள் ஏற்படுவதில்லை என்று ஒரு இலத்தின் ஆய்வு கூறுகிறது. கலவரங்களுக்கு முக்கிய காரணம் வெளியிலிருந்து வரும் ஒரு வலிமையும் ஆகும்.

### வரலாற்றில் நடந்த ஐந்து கொடூரமான உள்நாட்டுக் கலவரம்

| பெயர் | தேதி | உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| An Lushan Rebellion (China) | 755-763 | 30-35 மில்லியன் |
| Taiping Rebellion & Dungan Revolt | 1850-1877 | 20-30 மில்லியன் |
| ரஷ்யாவின் உள்நாட்டு கலவரம் | 1917-1922 | 9 மில்லியன் |
| கொரியாவின் உள்நாட்டு கலவரம் | 1950-1953 | 4 மில்லியன் |
| இரண்டாம் சூடான் போர் | 1983-2005 | 2மில்லியன் |
| (Source: Wikipedia) | | |

முரண்பாடுகளுக்கு மூலக்காரணம் வேறுப்பட்ட கலாச்சாரங்களைவிட அரசியல், பொருளாதாரம் போன்றவைகளே என்று பல அரசியல் விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். அரசியலினால் உந்தப்பட்டு, பண்பாடு கலாச்சாரம் என்று கூறிக்கொண்டு பிரச்சனைகளை ஏற்படுத்துவது குழந்தைத்தனமானது என்றும் அவர்கள் கருதுகிறார்கள். ஒரு இனமானது பொருளாதாரத்தில் மேம்பட்டிருந்தால், அந்த இனம் தன்னைவிட பொருளாதாரத்தில் தாழ்வுற்ற இன்னொரு இனத்தை அரசியல் செல்வாக்கினால் அழிக்க முற்படும் என்று வாதாடுகிறார். "World on Fire" என்ற நூலை எழுதிய Amy Chua. இந்த செயல்கள் சிறுபான்மையினராய் இருக்கும் ஒரு இனத்தை முழுவதுமாய் அழிக்க முற்படும்.

**தவறு மற்றும் சரியான மதம்**

அமெரிக்காவில் நடந்த உள்நாட்டு கலவரத்தின்போது, மதம் இரண்டு பிரிவினருக்கும் இடையே நின்றது என்று ஒரு சமீப கால வெளியீடு தெளிவாக்குகிறது. வடக்கு மற்றும் தெற்கு நாட்டைச் சார்ந்தவர்கள் தேவன் தங்கள் பக்கம் இருப்பதாக உறுதியாக நம்பினார்கள். தேவனே இந்த போரை நிலைப்படுத்தினார் என்றும் அதன் நாட்களையும், அதன் தீங்குகளையும், அதன் விளைவுகளையும் தேவன் முடிவு செய்வார் என்றும் பல மந்திரிகளும், படைத்தலைவர்களும், தலைவர்களும் அறிவித்துக் கொண்டிருந்தார்கள். உலகளவில், கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர், கடவுளின் பெயரால் பல வன்முறையில் ஈடுபட்டு ஒருவர் மற்றொருவருடைய இரத்தத்தைச் சிந்தி குற்றமுள்ளவர்கள் ஆனார்கள்.

இன்று பெரும்பாலானோர் நிரந்தர அமைதியைத் தேடினாலும் இவைபோன்ற கலவரங்கள் தவிர்க்க முடியாதவை என்றும் உணர்கின்றார்கள். சீஷர்கள், இயேசு கிறிஸ்துவிடம் அவருடைய இரண்டாம் வருகையைக்குறித்து, அடையாளங்களை வினவினபோது, இயேசு கிறிஸ்து அவர்களிடம் கூறியது, "யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது" (மத். 24:6). அமைதியின் அரசர் தமது இரண்டாம் வருகை வரை இந்த போர்களும், போர்களினால் ஏற்படும் அச்சங்களும் தவிர்க்க முடியாதவை. ஏசாயா கூறுவதுபோல், இயேசு கிறிஸ்துவின் இராஜ்யம் நிலைநாட்டப்படும்பொழுதே இவையெல்லாம் முழுமையாய் நிறைவுபெறும். "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்" (ஏசா. 9:6). போர்களெல்லாம் அழிவுறுவதற்கு முன் ஒரு உலகளாவிய அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும். அது அரசியலாலோ, மதத்தினாலோ, பொருளாதாரத்தினாலோ ஆதிக்கம் செலுத்தப்படாமல் இருக்கும். அந்த அரசாங்கம் நேர்மையைப் போதித்து, எல்லா மனுக்குலத்தையும் சமநிலைப்படுத்தும். இயேசு கிறிஸ்துவாலும், அவருடைய திருச்சபையாலும் உருவாக்கப்படும் இந்த அரசாங்கம் உயிர்த்தெழப்போகும் நம் ஆதிக்கால முதியோர்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே, தாவீது, தானியேல் மற்றும் பல பிரதிநிதிகளால் தேவனின் இந்த இராஜ்யம் இந்த பூமியில் ஆட்சி செய்யப்படும். இந்த புதிய பூமி நிலைநாட்டப்படும்பொழுது, இந்த பிரதிநிதிகள் உலகின் எல்லா குடியிருப்புகளையும் கண்காணிப்பார்கள். இந்த புதிய உலகம் நிலைநாட்டப்படும் முன்பு இன்னும் பல காரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. கர்வமும், வெறுப்பும், இரக்கத்திற்கும், அன்பிற்கும், பரஸ்பர மரியாதைக்கும் விட்டுக் கொடுக்க வேண்டும். சுயநலம் தாராள குணமாக மாற வேண்டும். பாவம் என்பது, நேர்மையாக மாற வேண்டும். மனிதன் இனிமேல் தன் சக மனிதனுடன் போருக்குச் செல்லாமல் இருக்க வேண்டும். சச்சரவு என்பது, இனி நம் வாழ்வின் பாதையாய் அமையக்கூடாது.

முதலில் இஸ்ரயேல் தேசத்தை நிலை நாட்டின பின், இயேசு கிறிஸ்துவின் நலம் பயக்கும் ஆட்சியால் எல்லா மனிதனின் இருதயமும் மாறும் "நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 31:33). இயேசு கிறிஸ்துவின் ஆட்சியைக்குறித்து ஏசாயா கூறுகையில், "தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்" (ஏசா. 9:7).

இந்த போர்களும், போர்களின் வதந்திகளும் விரைவில் நமக்கு ஒரு புதிய உலகிற்கு கூட்டிச் செல்லும். ஏசாயா கூறுவது போல, இந்த பூமி போரிட்டுக் கொண்டிருக்கும்பொழுதே இயேசு கிறிஸ்துவின் இராஜ்யத்தின் வேலை துவங்கிவிடும் "கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை" (ஏசா. 2:2-4).

விரைவில் இந்த பூமி போருக்கான தயாரிப்புகளை நிறுத்திவிடும். போர் கருவிகளாக உபயோகப்படுத்தப்பட்ட கருவிகளெல்லாம் விரைவில் நல்ல காரியங்களுக்காக உபயோகப்படும். பலருடைய இருதயங்களில் ஆதங்கமாய் இருக்கும் அந்த அமைதி, இயேசு கிறிஸ்துவின் பூலோக இராஜ்யம் கொண்டுவரும் அந்த இராஜ்யமானது, பயத்தையும், வெறுப்பையும் மத வெறியை இன்னும் மனித உயிரை படுகொலை செய்யும் வேறு எல்லாவித அறிவற்ற செயல்களையும் அகற்றிவிடும். நாம் களிக்கூர்ந்து இந்த இராஜ்யத்திற்காக மன்றாடுவோம்.